மானியக் கோரிக்கை எண்: 47

இந்து சமய அறநிலையத் துறை

2011 - 2012

கொள்கை விளக்கக் குறிப்பு

எஸ்.பி. சண்முகநாதன்

இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை

©
தமிழ்நாடு அரசு
2011

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை

இந்து சமய அறநிலையத்துறை

மானியக் கோரிக்கை எண். 47

கொள்கை விளக்கக் குறிப்பு 2011–2012

பொருளடக்கம்

வ. எண்	பொருள்	பக்க எண்.
1.	முகவுரை	1
2.	நிருவாகம்	1
3.	நிறுவனங்கள்	2
4.	நிறுவனங்களின் வகைப்பாடு	3
5.	நிருவாக அமைப்பு	4
6.	நகைகள் சரிபார்ப்பு அலுவலர்கள்	9
7.	தணிக்கை	9
8.	பொறியாளர்கள்	10
9.	செயல் அலுவலர்கள்	11
10.	திருமடங்களின் நிருவாகம்	12
11.	திருக்கோயில்களும் தமிழும்	12
12.	உயர்நிலை ஆலோசனைக் குழு	12
13.	பரம்பரை முறை வழிசாரா அறங்காவலர்கள் நியமனம்	13
14.	அதிகார வரம்பு	13
15.	தக்கார் நியமனம்	14
16.	நில நிருவாகம்	14
17.	வருவாய் நீதிமன்றங்கள்	15
18.	நியாய வாடகை நிர்ணயம்	16
19.	திருக்கோயில்களின் நிலங்களை மீட்டல்	17
20.	கூட்டு ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துதல்	17
21.	அன்னதானத் திட்டம்	18
22.	ஆன்மிகம் மற்றும் ஒழுக்க நன்னெறி வகுப்புகள்	20

வ. எண்	பொருள்	பக்க எண்.
23.	ஏழை எளியோருக்கு திருமணம்	21
24.	யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம்	21
25.	கம்பி வட ஊர்திகள்	22
26.	திருப்பணி	23
	i. பொதுமக்கள் அளிக்கும் நன்கொடை	24
	ii. திருக்கோயில்களின் சொந்த நிதி	24
	iii. நிதிமாற்ற நிதி	24
	i v. அரசு 'மானியம்	24
	v. பொதுநல நிதி	25
	vi. ஆலய மேம்பாட்டு நிதி	25
	vii. கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி	25
	viii. திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி	26
	ix. உபயத் திருப்பணி	26
	x. நிதி ஆணைய நிதியுதவி	26
	xi. ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்களுக்கான திருப்பணி	27
	xii. சுற்றுலாத்துறை நிதி	27
27.	திருக்குடமுழுக்கு	27
28.	மழைநீர் சேகரிப்பும் திருக்குளத் திருப்பணியும்	28
29.	கால பூஜைகளை புதுப்பித்தல்	29
30.	தங்கரதமும் வெள்ளிரதமும்	30
31.	திருத்தேர்களைப் பாதுகாத்தலும் பராமரித்தலும்	36
32.	கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்	36
33.	ஒருகால பூஜைத் திட்டம்	37

வ. எண்	பொருள்	பக்க எண்.
34.	பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள்	38
35.	புடவை/வேட்டி வழங்குதல்	39
36.	உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்கள் பாதுகாப்பு	40
37.	திருக்கோயில் பாதுகாப்புப் படை	42
38.	கருணை இல்லங்கள்	42
39.	கல்வி நிறுவனங்களும் பிற நிறுவனங்களும்	43
40.	பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் அடிப்படை வசதிகள்	53
41.	தமிழில் வழிபாடு	53
42.	அருளாளர்கள் விழா	53
43.	தலவரலாறும் தலபுராணமும்	56
44.	பயணியர் கையேடு	56
45.	ஆகமங்களையும் இதர நூல்களையும் தமிழில் வெளியிடுதல்	57
46.	பட்டயப் பொறியாளர்	57
47.	ஸ்தபதிகள்	57
48.	சிறப்பு வழிபாடும் பொது விருந்தும்	58
49.	புத்தொளிப் பயிற்சித் திட்டம்	58
50.	திருக்கோயில்களில் நாதசுர இசைவாணர் நியமனம்	58
51.	திருக்கோயில் பணியாளர்கள் நலத்திட்டங்கள்	59
	i. குடும்ப நல நிதி	60
	ii. சிறப்பு சேம நல நிதித் திட்டம்	60
	iii. திருக்கோயில் ஊழியர் நல நிதி	61

வ. எண்	பொருள்	பக்க எண்.
	iv. கருணை அடிப்படையில் வாரிசுதாரர்களுக்கு வேலை வாய்ப்பு	61
	v. ஓய்வூதியத் திட்டம்	61
52.	திருக்கோயில் பணியாளரின் மக்கட் செல்வங்களுக்குப் படிப்புதவித் திட்டம்	64
53.	கோசாலைகள்	64
54.	"திருக்கோயில்"– திங்களிதழ்	64
55.	நிறைவுரை	65
56.	இணைப்பு – பகுதி II திட்டங்கள்	68

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை

இந்து சமய அறநிலையத்துறை

மானியக் கோரிக்கை எண். 47

கொள்கை விளக்கக் குறிப்பு

2011–2012

முகவுரை

தமிழகத் திருக்கோயில்கள் பண்பாட்டுத் தொன்மை, கலை வளம், வரலாறு, வழிபாட்டு மரபு ஆகியவற்றை உலகெங்கும் பறை சாற்றும் கலைக்களஞ்சியங்களாகும். திருக்கோயில்கள், மக்களின் வழிபாட்டு மையங்களாக உள்ளதோடு மட்டுமன்றி தமிழர்களின் கலை, பண்பாட்டு வளர்ச்சியின் சின்னங்களாகவும் இந்து சமய மரபுமாட்சியை வெளிக்கொணரும் காலச்சுவடுகளாகவும் விளங்குகின்றன. திருக்கோயில்களையும் அறக்கட்டளைகளையும் செவ்விய முறையில் நிருவகிப்பதும் பாதுகாப்பதும் அரசின் தலையாய பொறுப்புகளாகும்.

2. திருக்கோயில்களில் தொன்று தொட்டு நிலவி வரும் வழக்கம் மற்றும் வழக்காறுகளைப் பின்பற்றி வழிபாடுகள் நடத்துதலும் பக்தர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தருதலும் திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களைப் பாதுகாத்துப் பராமரித்தலும் திருக்கோயில்களின் தொன்மைப் பண்பு மாறாமல் காத்தோம்புதலும் அறநிலையத்துறையின் முக்கியக் கடமைகளாகும்.

நிருவாகம்

3. இந்து சமய அறநிறுவனங்களின் நிருவாகம் திறம்பட நடைபெறவும் நிருவாகப் பணிகளை மேற்பார்வையிடவும் 1925ஆம்

ஆண்டிற்கு முன்பிருந்தே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்து சமய அறக்கொடைகள் வாரியம் 1925ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. அதன் மூலம் இந்து சமய திருக்கோயில்களும் அறக்கொடைகளும், திருமடங்களும் கண்காணிக்கப்பட்டன. இந்து சமய அறக்கொடைகள் வாரியம் 1951ஆம் ஆண்டு கலைக்கப்பட்டு, அரசுத் துறையாக இயங்கிட வழிவகை செய்யப்பட்டது. 1951ஆம் ஆண்டிலிருந்து செயற்பாட்டில் இருந்த இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தை நடைமுறைப்படுத்திய போது சில இடர்ப்பாடுகள் நேர்ந்தன. இவற்றைக் களைவதற்காகவும் பல்வேறு திருத்தச் சட்டங்களை ஒருங்கிணைப்பதற்காகவும் இந்து சமய அறநிலைக் கொடைகள் (22/1959) சட்டம் 1959ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இச்சட்டம், 1.1.1960லிருந்து செயற்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. 1959ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தில் காலத்தின் தேவைக்கேற்ப பல்வேறு சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இச்சட்டத்தின் மூலம் திருக்கோயில்கள் மற்றும் அறக்கொடைகள் நிருவாகத்தை விரிவுபடுத்தி அவற்றை மேற்பார்வையிட வகை செய்ததோடு, இந்து சமய அறநிலையத்துறையின் ஆணையர் மற்றும் சார்நிலை அலுவலர்களுக்கு அதிகார வரம்புகளும் வரையறுக்கப்பட்டன.

நிறுவனங்கள்

4. இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில், தற்போது 38,481 இந்து சமய மற்றும் சமண சமய அற நிறுவனங்கள் உள்ளன. அதன் விவரம் வருமாறு:

1.	திருக்கோயில்கள்	**36,441**
2.	திருமடங்கள்	**56**
3.	திருமடத்துடன் இணைந்த திருக்கோயில்கள்	**57**
4.	குறிப்பிட்ட அறக்கட்டளைகள்	**1,721**

5.	அறக்கட்டளைகள்	189
6.	சமணத் திருக்கோயில்கள்	17
	மொத்தம்	**38,481**

நிறுவனங்களின் வகைப்பாடு

5. இந்து சமய நிறுவனங்கள், ஆண்டு வருமான அடிப்படையில், பட்டியலில் சேர்ந்த நிறுவனங்கள் மற்றும் பட்டியலில் சேராத நிறுவனங்கள் என பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

வ. எண்.	*சமய நிறுவனங்களின் வகைப்பாடு*	*நிறுவனங்களின் ஆண்டு வருமானம்*	*நிருவாகத்தின் எண்ணிக்கை*
1.	சட்டப்பிரிவு–46(iii)	ரூ.10,00,000/–மும் அதற்கு மேலும் ஆண்டு வருமானம் உள்ளவை.	182
2.	சட்டப்பிரிவு–46(ii)	ரூ. 2,00,000/–லிருந்து ரூ. 10,00,000/–க்கும் குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவை.	498
3.	பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள். சட்டப்பிரிவு–46(i)	ரூ. 10,000/–லிருந்து ரூ. 2,00,000/–க்கும் குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவை	3331
4.	பட்டியலைச் சாராத நிறுவனங்கள். சட்டப்பிரிவு–49(1)	ரூ. 10,000/–க்கு குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவை	34470
		மொத்தம்	**38,481**

நிருவாக அமைப்பு

6. 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தின் (திருத்தச் சட்டம் 39/1996)–படி இந்து சமய அறநிலையத்துறையின் ஆணையராக, இந்திய ஆட்சிப் பணி பதவித்தரத்தைச் சேர்ந்த அலுவலர் நியமனம் செய்யப்பட்டு பணியாற்றுகின்றார். துறையின் பொது நிருவாகம், செயற்பாடுகள் ஆகியவை ஆணையரின் தலைமையில் நடைபெறுகின்றன. இத்துறையின் நிருவாகத்தில் ஆணையர், அலுவலர்கள், சார்நிலை அலுவலர்கள், செயல் அலுவலர்கள், அயற்பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், ஓட்டுநர்கள், காவலர்கள், துப்புரவுப் பணியாளர்கள் ஆகிய பணியிடங்கள் மொத்தம் 2409 அரசால் அனுமதிக்கப்பட்டு, தற்போது 1336 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். தலைமையிடத்தில், கீழ்க்காணும் அலுவலர்கள் ஆணையாளருக்கு உதவியாகப் பணியாற்றுகின்றனர்.

1. கூடுதல் ஆணையர் (பொது)
2. கூடுதல் ஆணையர் (விசாரணை)
3. இணை ஆணையர்(தலைமையிடம்)
4. இணை ஆணையர் (திருப்பணி)
5. துணை ஆணையர் (சட்ட சேர்மம்)
6. துணை ஆணையர் (கல்வி மற்றும் தொண்டு நிறுவனம்)
7. உதவி ஆணையர் (சட்ட சேர்மம்)
8. உதவி ஆணையர் (சரிபார்ப்பு) தலைமையிடம்
9. உதவி ஆணையர், கிராமக்கோயில் பூசாரிகள் நலவாரியம்

இத்துறையில் பணிபுரியும் மாற்றுப்பணி அலுவலர்களின் விவரம் வருமாறு:

மாற்றுப்பணி

வ. எண்	பதவி நிலை	அலுவலர் களின் எண்ணிக்கை	துறை
1.	தனி அலுவலர் (திருக்கோயில் நிலங்கள்) (மாவட்ட வருவாய் அலுவலர் நிலை)	2	வருவாய்த் துறை
2.	கண்காணிப்புப் பொறியாளர்	1	நெடுஞ்சாலைத் துறை/ பொதுப்பணித்துறை
3.	செயற்பொறியாளர்	1	நெடுஞ்சாலைத் துறை/ பொதுப்பணித்துறை
4.	உதவிக் கோட்டப் பொறியாளர்	1	நெடுஞ்சாலைத் துறை/ பொதுப்பணித்துறை
5.	உதவிப் பொறியாளர்	2	நெடுஞ்சாலைத் துறை/ பொதுப்பணித்துறை
6.	உதவிப் பொறியாளர் (மின்)	1	மின்துறை
7.	முதுநிலை வரைதொழில் அலுவலர்	1	நெடுஞ்சாலைத் துறை/ பொதுப்பணித்துறை
8.	இளநிலை வரைவாளர்	2	நெடுஞ்சாலைத் துறை/ பொதுப்பணித்துறை
9.	வரைவாளர்	2	நெடுஞ்சாலைத் துறை/ பொதுப்பணித்துறை
10.	முதுநிலை கணக்கு அலுவலர்	1	கருவூலக் கணக்குத் துறை
11.	உதவி கணக்கு அலுவலர்	1	கருவூலக் கணக்குத் துறை
12.	தலைமைத் தணிக்கை அலுவலர் (துணைச் செயலாளர் நிலை)	1	நிதித்துறை

7. தலைமையிட நிருவாகம், அனைத்து சார்நிலை அலுவலகங்களின் நிருவாகம், பணியாளர்களின் பணியமைப்பு, திருக்கோயில்களின் மேலாண்மை நிருவாகம், திருக்கோயில் பணியாளர்களின் பணியமைப்பு, திருப்பணி, நீதிமன்ற வழக்குகள், திருக்கோயில்களின் தணிக்கை ஆகியவற்றில் மேற்காணும் அலுவலர்கள் ஆணையருக்கு உறுதுணையாக செயலாற்றுகின்றனர்.

8. இத்துறை நிருவாக வசதிக்காக, மாநில அளவில் 11 மண்டலங்களாகவும் 28 கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. மண்டலங்கள் ஒவ்வொன்றும் ஓர் இணை ஆணையரின் நிருவாகத்தின் கீழும் கோட்டங்கள் ஒவ்வொன்றும் ஓர் உதவி ஆணையரின் நிருவாகத்தின் கீழும் இயங்கி வருகிறது. அவை பற்றிய விவரம் வருமாறு:

வ. எண்	மண்டலம்	கோட்டம்	அதிகார வரம்பு
1.	இணை ஆணையர் சென்னை	1. உதவி ஆணையர் சென்னை	சென்னை மாவட்டம்
2.	இணை ஆணையர் வேலூர்	2. உதவி ஆணையர் திருவள்ளூர்	திருவள்ளூர் மாவட்டம்
		3. உதவி ஆணையர் காஞ்சிபுரம்	காஞ்சிபுரம் மாவட்டம்
		4. உதவி ஆணையர் வேலூர்	வேலூர் மாவட்டம்
3.	இணை ஆணையர் சேலம்	5. உதவி ஆணையர் தருமபுரி	தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்
		6. உதவி ஆணையர் சேலம்	சேலம் மாவட்டம்
		7. உதவி ஆணையர் நாமக்கல்	நாமக்கல் மாவட்டம்

வ. எண்	மண்டலம்	கோட்டம்	அதிகார வரம்பு
4.	இணை ஆணையர் கோயம்புத்தூர்	8. உதவி ஆணையர் கோயம்புத்தூர்	கோயம்புத்தூர் நீலகிரி மாவட்டங்கள்
		9. உதவி ஆணையர் ஈரோடு	ஈரோடு மாவட்டம்
		10. உதவி ஆணையர் திருப்பூர்	திருப்பூர் மாவட்டம்
5.	இணை ஆணையர் தஞ்சாவூர்	11. உதவி ஆணையர் தஞ்சாவூர்	தஞ்சாவூர் மாவட்டம் (திருவிடைமருதூர் மற்றும் கும்பகோணம் வட்டங்கள் தவிர)
		12. உதவி ஆணையா நாகப்பட்டினம்	நாகபபட்டினம மாவட்டம் (சீர்காழி, மயிலாடுதுறை மற்றும் தரங்கம்பாடி வட்டங்கள் தவிர)
		13. உதவி ஆணையர் திருவாரூர்	திருவாரூர் மாவட்டம்
6.	இணை ஆணையர் மயிலாடுதுறை	14. உதவி ஆணையர் கும்பகோணம்	தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவிடைமருதூர், கும்பகோணம் வட்டங்கள், நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை, சீர்காழி மற்றும் தரங்கம்பாடி வட்டங்கள்
7.	இணை ஆணையர் விழுப்புரம்	15. உதவி ஆணையர் கடலூர்	கடலூர் மாவட்டம்
		16. உதவி ஆணையர் விழுப்புரம்	விழுப்புரம் மாவட்டம்
		17. உதவி ஆணையர் திருவண்ணாமலை	திருவண்ணாமலை மாவட்டம்

வ. எண்	மண்டலம்	கோட்டம்	அதிகார வரம்பு
8.	இணை ஆணையர் திருச்சிராப்பள்ளி	18. உதவி ஆணையர் திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி மாவட்டம்
		19. உதவி ஆணையர் அரியலூர்	பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்கள்
		20. உதவி ஆணையர் புதுக்கோட்டை	புதுக்கோட்டை மாவட்டம்
		21. உதவி ஆணையர் கரூர்	கரூர் மாவட்டம்
9.	இணை ஆணையர் மதுரை	22. உதவி ஆணையர் மதுரை	மதுரை மாவட்டம்
		23. உதவி ஆணையர் திண்டுக்கல்	திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்கள்
10.	இணை ஆணையர் சிவகங்கை	24. உதவி ஆணையர் விருதுநகர்	விருதுநகர் மாவட்டம்
		25. உதவி ஆணையர் பரமக்குடி	சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்
11.	இணை ஆணையர் திருநெல்வேலி	26. உதவி ஆணையர் திருநெல் வேலி	திருநெல்வேலி மாவட்டம்
		27. உதவி ஆணையர் தூத்துக்குடி	தூத்துக்குடி மாவட்டம்
		28. உதவி ஆணையர் நாகர்கோயில்	கன்னியாகுமரி மாவட்டம்

9. இவற்றுடன், வட்ட அளவில் 224 ஆய்வாளர்கள் களப் பணியாளர்களாகப் பணிபுரிகின்றனர்.

10. பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு உதவியாக துணை ஆணையர் ஒருவரும் உதவி ஆணையர் நிலையில் ஒரு நேர்முக உதவியாளரும் உள்ளனர்.

11. இணை ஆணையர் நிலையில் செயல் அலுவலர்களைக் கொண்டுள்ள திருச்செந்தூர், மதுரை, ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் மற்றும் திருத்தணி ஆகிய திருக்கோயில்களில் உதவி ஆணையர் நிலையில் 5 நேர்முக உதவியாளர்கள் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பணியிடங்களில் 5 நேர்முக உதவியாளர்கள் பணிபுரிகின்றனர்.

நகைகள் சரிபார்ப்பு அலுவலர்கள்

12. திருக்கோயில்களின் நகைகள், அணிகலன்கள், விலையுயர்ந்த பொருள்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதற்காக, இணை ஆணையர் மண்டலங்களில், துணை ஆணையர் நிலையில் 6 சரிபார்ப்பு அலுவலர்களும் உதவி ஆணையர் நிலையில் 4 சரிபார்ப்பு அலுவலர்களும் பணிபுரிகின்றனர்.

தணிக்கை

13. இந்து சமய அறநிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதில் 2 துணைத் தலைமைத் தணிக்கை அலுவலர்களும் 19 மண்டலத் தணிக்கை அலுவலர்களும் 28 உதவித் தணிக்கை அலுவலர்களும் தலைமைத் தணிக்கை அலுவலருக்கு உதவி புரிகின்றனர்.

14. எட்டு இணை ஆணையர் நிலை செயல் அலுவலர்கள் உள்ள திருக்கோயில்களில், அவர்களுக்கு உதவியாக, மண்டலத் தணிக்கை அலுவலர் நிலையில் 8 முதுநிலை கணக்கு அலுவலர்கள் அயற்பணியில் பணிபுரிகின்றனர்.

பொறியாளர்கள்

15. திருக்கோயில்களின் திருப்பணிகளையும் கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ள மதிப்பீடுகள் தயாரித்தல், மேற்பார்வையிடல், அளவீடு செய்தல் போன்ற பணிகளுக்காக, தலைமையிடத்தில் கண்காணிப்புப் பொறியாளர் ஒருவர், செயற்பொறியாளர் ஒருவர், உதவிக் கோட்டப் பொறியாளர் ஒருவர், உதவிப் பொறியாளர்கள் இருவர், உதவிப் பொறியாளர்(மின்) ஒருவர், முதுநிலை வரைதொழில் அலுவலர் ஒருவர், இளநிலை வரைவாளர்கள் இருவர், வரைவாளர்கள் இருவர் ஆகியோர் அடங்கிய பொறியியல் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. ஒவ்வொரு இணை ஆணையர் அலுவலகத்திலும் உதவிக் கோட்டப் பொறியாளர் ஒருவரும், இளநிலை வரைதொழில் அலுவலர் ஒருவரும் (விழுப்புரம் இணை ஆணையர் அலுவலகம் தவிர) பணிபுரிகின்றனர். மேலும் 24 உதவி ஆணையர் அலுவலகங்களில் தலா ஒரு உதவிப் பொறியாளர் வீதம் பணிபுரிகின்றனர்.

16. திருச்சி, சேலம், மதுரை ஆகிய இணை ஆணையர் மண்டலங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு செயற்பொறியாளர் வீதம் மூன்று செயற்பொறியாளர் பணியிடங்களும் ஒரு மின் உதவிப் பொறியாளர் வீதம் மூன்று மின் பொறியாளர் பணியிடங்களும் உள்ளன.

17. இவைகள் தவிர, பழநி, சமயபுரம், மதுரை, திருத்தணி, பண்ணாரி, மருதமலை, ஆனைமலை, அழகர்கோயில் ஆகிய திருக்கோயில்களில் திருப்பணிகளையும் கட்டுமானப்பணிகளையும் மேற்கொள்ள ஏதுவாக மதிப்பீடுகள் தயாரித்தல், மேற்பார்வையிடல் போன்ற பணிகளுக்காக பொறியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

18. சென்னை, திருச்சி, மதுரை, சேலம் ஆகிய இணை ஆணையர் மண்டலங்களில் பணிபுரிவதற்காக, திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சமயபுரம் அருள்மிகு

மாரியம்மன் திருக்கோயில், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் நான்கு முதுநிலை வரைவாளர் பணியிடங்கள் உள்ளன.

19. சென்னை, திருச்சி, மதுரை, சேலம் ஆகிய இணை ஆணையர் மண்டலங்களில் பணிபுரிவதற்காக சோளிங்கர் அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில், அழகர்கோயில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், நாமக்கல் அருள்மிகு ஆஞ்சநேய சுவாமி திருக்கோயில் ஆகியவற்றில் 4 வரைவாளர் பணியிடங்கள் உள்ளன.

செயல் அலுவலர்கள்

20. திருக்கோயில்களின் முக்கியத்துவம், வருமானம், சொத்துக்கள், அதன் செயற்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் செயல் அலுவலர்கள் பதவியிடங்கள் இசைவளிக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டும் கண்காணிக்கப்பட்டும் வருகின்றன.

வ. எண்.	பதவி நிலை	பணியிடங்கள் எண்ணிக்கை
1.	இணை ஆணையர்/செயல் அலுவலர்	10
2.	துணை ஆணையர்/செயல் அலுவலர்	10
3.	உதவி ஆணையர்/செயல் அலுவலர்	27
4.	செயல் அலுவலர் நிலை 1	66
5.	செயல் அலுவலர் நிலை 2	112
6.	செயல் அலுவலர் நிலை 3	250
7.	செயல் அலுவலர் நிலை 4	154
	கூடுதல்	**629**

திருமடங்களின் நிருவாகம்

21. இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையில் 56 திருமடங்களும், அவற்றுடன் இணைந்த 19 குறிப்பிட்ட கட்டளைகளும் உள்ளன. இவைகளின் நிருவாகம் முறையாக நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் மண்டலத் தணிக்கை அலுவலர் ஒருவர், கண்காணிப்பாளர் இருவர், ஆய்வாளர் இருவர், தணிக்கை ஆய்வாளர் இருவர், உதவியாளர் இருவர் அடங்கிய பிரிவு ஒன்று ஆணையருக்கு உதவியாகத் தலைமையிடத்தில் இயங்குகிறது.

திருக்கோயில்களும் தமிழும்

22. ஆழ்வார்களும் நாயன்மார்களும் அருளார்ந்த துறவிகளும் தாங்கள் சென்ற இடங்களிலெல்லாம் இறைவனைச் செந்தமிழிலேயே போற்றிப் பாடி வணங்கியுள்ளனர். அத்தகைய அருளாளர்கள் அருளிய தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருப்புகழ், நாலாயிர திவ்வியபிரபந்தம் ஆகியவை தமிழ் மொழி வளர்ந்து செழித்தோங்கிட துணையாக அமைந்துள்ளன.

உயர்நிலை ஆலோசனைக்குழு

23. தமிழகத்திலுள்ள திருக்கோயில்கள் மற்றும் அறநிறுவனங்கள் தொடர்பாக அரசுக்கு அவ்வப்பொழுது ஆலோசனைகளை வழங்கிட 1959ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களைத்** தலைவராகவும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைத் துணைத்தலைவராகவும் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசு செயலர் அவர்களை அலுவல் சார் உறுப்பினராகவும் இந்து சமய அறநிலையத்

துறை ஆணையர் அவர்களை அலுவல் சார் உறுப்பினர்–செயலராகவும் 9 பேர்களுக்கு மேற்படாத அலுவல் சாரா உறுப்பினர்களையும் கொண்டு ஆலோசனைக் குழு செயல்படும்.

பரம்பரை முறை வழிசாரா அறங்காவலர்கள் நியமனம்

24. இந்து சமய அறநிறுவனங்களின் நிருவாகத்தை இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தின் கீழ் நிருவகிப்பதற்காக, ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் பரம்பரை முறை வழிசாரா அறங்காவலர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர். அறங்காவலர் குழுவில், 3 அறங்காவலர்களுக்குக் குறையாமலும் 5 அறங்காவலர்களுக்கு மிகாமலும் நியமனம் செய்யப்பட வேண்டும். இக்குழுவில், பெண் உறுப்பினர் ஒருவரும், ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரும் உறுதியாக இடம் பெற வேண்டும். அறங்காவலர் குழுவிற்கான பதவிக் காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும்.

25. அதிகார வரம்பு

(i) **அரசு:**

பட்டியலைச் சேர்ந்த சமய நிறுவனங்களில் ரூ.10,00,000/– மற்றும் அதற்கு மேல் ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டப் பிரிவு 46(iii) கீழ் அறிவிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு அறங்காவலர்கள் அரசால் நேரடியாக நியமிக்கப்படுவர்.

(ii) **ஆணையர்:**

பட்டியலைச் சேர்ந்த, ஆண்டு வருமானம் ரூ. 2,00,000/–லிருந்து ரூ.10,00,000/–க்கும் குறைவாக உள்ள, சட்டப்பிரிவு 46(ii) கீழ் அறிவிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு மூன்று அறங்காவலர்கள்

ஆணையரால் நியமிக்கப்படுவர். தேவையெனில் பொது நலன் கருதி மேலும் இரண்டு அறங்காவலர்கள் அரசால் நியமனம் செய்யப்படுவர்.

(iii) **இணை ஆணையர்:**

பட்டியலைச் சேர்ந்த, ஆண்டு வருமானம் ரூ.10,000/–லிருந்து ரூ.2,00,000/–க்கும் குறைவாக உள்ள, சட்டப்பிரிவு 46(i)கீழ் அறிவிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு மூன்று அறங்காவலர்கள் அந்தந்த மண்டல இணை ஆணையர்களால் நியமிக்கப்படுவர். தேவையெனில் பொது நலன் கருதி மேலும் இரண்டு அறங்காவலர்கள் அரசால் நியமனம் செய்யப்படுவர்.

(iv) **உதவி ஆணையர்:**

பட்டியலைச் சேராத, சட்டப்பிரிவு 49(1)-ன்கீழ் ரூ.10,000/–க்குக் குறைவாக ஆண்டு வருமானம் பெறும் நிறுவனங்களுக்கு, அந்தந்த மாவட்ட உதவி ஆணையர்களால் மூன்று அறங்காவலர்கள் நியமிக்கப்படுவர். தேவையெனில், பொது நலன் கருதி மேலும் இரண்டு அறங்காவலர்கள் அரசால் நியமனம் செய்யப்படுவர்.

தக்கார் நியமனம்

26. அறங்காவலர் குழுவின் பதவிக்காலம் முடிந்து மீண்டும் அறங்காவலர் குழு நியமிக்கப்படும் வரை, அறங்காவலர் குழுவின் கடமைகளை நிறைவேற்றிட இடைக்கால ஏற்பாடாக தகுதியான ஒருவர் தக்காராக மேற்கண்ட அதிகார வரம்பு அடிப்படையில் நியமனம் செய்யப்படுவர்.

நில நிருவாகம்

27. இத்துறையின் கட்டுப்பாட்டில் இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமாக **4,78,462.46** ஏக்கர் பரப்புடைய

நன்செய், புன்செய், மானாவாரி நிலங்களும் 22,599 கட்டடங்களும் 33,627 மனைகளும் உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு :

நிலத்தின் தன்மை	*திருக்கோயில் நிலங்கள் (ஏக்கரில்)*	*திருமடத்தின் நிலங்கள் (ஏக்கரில்)*	*மொத்த நிலங்கள் (ஏக்கரில்)*
நன்செய்	1,83,669.29	21,282.05	2,04,951.34
புன்செய்	2,18,226.24	34,538.88	2,52,765.12
மானாவாரி	20,746.00	இல்லை	20,746.00
மொத்தம்	4,22,641.53	55,820.93	4,78,462.46

28. திருக்கோயில்கள், அறக்கொடைகள், திருமடங்கள் ஆகியவற்றிற்குச் சொந்தமான விவசாய நிலங்களை மொத்தம் 1,23,729 குத்தகைதாரர்கள் அனுபவித்து வருகின்றனர்.

வருவாய் நீதிமன்றங்கள்

29. திருக்கோயில்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களைப் பயிர் செய்துவரும் பதிவு செய்யப்பட்ட குத்தகைதாரர்களுக்கும் திருக்கோயில் நிருவாகத்திற்கும் இடையே உள்ள சிக்கல்கள், குத்தகை நிலுவைகளை வசூலித்தல், நியாயமான குத்தகை நிர்ணயம் செய்தல், குத்தகை செலுத்தாதவர்களை நிலங்களிலிருந்து வெளியேற்றுதல் ஆகியவற்றை 1955ஆம் ஆண்டு வேளாண் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்தின்படி விசாரித்து முடிவு செய்வதற்காக வருவாய் நீதிமன்றங்கள் பின்வருமாறு அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன:

நீதிமன்றங்கள்	*முகாம் நீதிமன்றங்கள்*
1. தஞ்சாவூர்	1. மன்னார்குடி
2. திருச்சிராப்பள்ளி	2. கும்பகோணம்
3. மயிலாடுதுறை	3. சேலம்
4. திருவாரூர்	4. தென்காசி
5. கடலூர்	
6. மதுரை	

30. மேற்கண்ட நீதிமன்றங்களில் ரூ. **28.27** கோடி குத்தகை நிலுவை தொடர்பான **28,382** வழக்குகள் தொடரப்பட்டு, **13,307** வழக்குகள் தீர்வு காணப்பட்டுள்ளன. ரூ.**11.74** கோடி குத்தகை நிலுவைத் தொகையினை திருக்கோயில்களுக்குச் செலுத்தப்பட வேண்டும் என வருவாய் நீதிமன்றங்களால் தீர்ப்பளிக்கப்பட்டது. இன்னும் ரூ.**16.53** கோடி நிலுவைத் தொகை குறித்து **15,075** வழக்குகள் நிலுவையில் உள்ளன.

31. வருவாய் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள திருக்கோயில் நிலக்குத்தகைத் தொடர்பான வழக்குகளை விரைவில் தீர்வு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

நியாய வாடகை நிர்ணயம்

32. இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான மனைகள் மற்றும் கட்டடங்களுக்கான நியாயமான வாடகையை நிர்ணயம் செய்வதற்காக இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி, நியாயமான வாடகையை நிர்ணயம் செய்ய மண்டல இணை ஆணையர், செயல் அலுவலர்/ அறங்காவலர்/அறங்காவலர் குழுத் தலைவர், பதிவுத்துறையின் மாவட்டப் பதிவாளர் ஆகியோரைக் கொண்ட நியாய வாடகை நிர்ணயக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த நியாய வாடகை நிர்ணயக் குழுவின் மூலமாக வணிக நோக்கு மற்றும் குடியிருப்பு ஆகியவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வரும் மனைகள் மற்றும் கட்டடங்களுக்கு நியாயமான வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

33. நியாயமான வாடகையை நிர்ணயிப்பதிலும் நியாயமான வாடகையை வசூலிப்பதிலும் இடைக்காலத்தில் ஏற்பட்ட தொய்வை சரி செய்வதற்காக, நியாய வாடகை நிர்ணயக் குழுவின் மூலம் அனைத்து அற நிறுவனங்களுக்கும் சொந்தமான கட்டடம் மற்றும் மனைகளுக்கு விரைவில் நியாயமான வாடகை நிர்ணயம் செய்து, அதனை வசூலித்து வருவாயைப் பெருக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருக்கோயில்களின் நிலங்களை மீட்டல்

34. நிலவரித்திட்டம் மற்றும் நில உடமை மேம்பாட்டுத் திட்டச் செயலாக்கத்தின் போது இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள் தவறுதலாக தனிப்பட்ட நபர்களின் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது. இவற்றை சரி செய்வதற்காக, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு இந்த இரண்டு மாவட்டங்களுக்கும் இரண்டு மாவட்ட வருவாய் அலுவலர்கள் தனி அலுவலர்களாக நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றனர்.

35. வருவாய்த் துறைப் பதிவேடுகளில் இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள் தொடர்பான குறைபாடுகளை சரி செய்வதற்கு, அவர்கள் வாயிலாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கூட்டு ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துதல்

36. திருக்கோயில்களுக்குச் சொந்தமான காலிமனை, நிலம் ஆகியவற்றினை குடியிருப்புக்காகக் கூட்டாக ஆக்கிரமித்து நீண்டகாலமாக (30 ஆண்டுகளுக்கும் மேலாக) குடியிருந்து வருபவர்களை, வாடகைதாரர்களாக சில நிபந்தனைகளுக்குட்பட்டு முறைப்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, கூட்டு ஆக்கிரமிப்பாளர்களை முறைப்படுத்த அரசாணையில் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

1) நீண்ட காலமாக (30 ஆண்டுகளுக்கும் மேலாக) குடியிருப்பு நோக்கத்திற்காக நிலம் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

2) அரசாணையின்படி நிர்ணயிக்கப்பட்ட நியாய வாடகையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

3) வாடகை நிலுவைத் தொகையினை, 12 மாதங்களில், சம தவணைகளில் செலுத்துதல் வேண்டும்.

4) 10 மாத வாடகையை நன்கொடையாக வழங்குதல் வேண்டும்,

5) வாடகை நிர்ணயம் 1.7.1998 அன்றிலிருந்து செயற்படுத்த வேண்டும்.

அன்னதானத் திட்டம்

37. *"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"* என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியமான புறநானூறு நமக்கு நன்கு அறிவுறுத்தியுள்ளது.

38. இந்நலம் பயக்கும் புதுமைத் திட்டத்தினை நமது **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், 23.3.2002 அன்று, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில்** தம் திருக்கரத்தால் உணவு படைத்து தொடங்கி வைத்தார். முதற்கட்டமாக, **63** திருக்கோயில்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. அதன் பின்னர், இத்திட்டம் படிப்படியாக ஏழு கட்டங்களாக **360** திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. தற்போது இந்த அன்னதானத் திட்டம் மொத்தம் **362** திருக்கோயில்களில்

நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், ஆன்றோர்களாலும், சான்றோர்களாலும், பக்தர்களாலும், ஆர்வலர்களாலும் பெரிதும் பாராட்டுக்குரிய திட்டமாகத் திகழ்கிறது.

39. **“தானங்களில் சிறந்தது அன்னதானம்”** என்பதை நம்முடைய சமயச் சான்றோர்களும், பெரியோர்களும் பன்னெடுங்காலமாகவே நமக்கு வலியுறுத்தினர். உணவளிப்பவர் உயிர் அளிப்பதற்கு ஒப்பானவர் என்பதை உணர்ந்து இத்திட்டத்திற்கு எளியோர்கள் முதல் செல்வந்தர்கள் வரை தம்மால் இயன்ற அளவிற்கு நன்கொடைகளை வழங்குகின்றனர்.

40. குறிப்பாக, அன்னதானத் திட்டத்திற்கென ஆணையர் அலுவலகத்தில் ஆணையரின் பதவிப்பெயரில் வங்கிக் கணக்கு ஒன்று தொடங்கப்பட்டது. இந்தக் கணக்கில், ரூ. 3.27 கோடி நன்கொடை பெறப்பட்டு வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், நிதிவசதிமிக்க திருக்கோயில்களின் உபரிநிதியில் இருந்து ரூ.20 கோடி நிதி பெறப்பட்டு, இத்திட்டத்திற்காக ஒரு சிறப்பு நிலை முதலீடாக வைப்பீடு செய்யப்பட்டது. தற்போது, இத்திட்டத்திற்கு மொத்தம் ரூ.35.10 கோடி வைப்பு நிதியாக உள்ளது.

41. இந்த நிதி ஆதாரத்திலிருந்து ஈட்டப்பட்ட வட்டித் தொகையானது, இத்திட்டத்தைச் செயல்படுத்தும் போது நிதிப்பற்றாக்குறையுள்ள திருக்கோயில்களுக்கு வழங்கப்படும். அன்னதானத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள 362 திருக்கோயில்களிலும், இத்திட்டத்திற்கென உண்டியல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

42. நாள்தோறும் அன்னதானத் திட்டத்தை செயல்படுத்தி வருகின்ற திருக்கோயில்களில் உச்சிகால பூஜை முடிந்தவுடன் திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. இந்த அன்னதானத்தில், சாதம், சாம்பார், ரசம்,

மோர், கூட்டு, பொரியல், ஊறுகாய் ஆகிய உணவு வகைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம், பக்தர்கள் வருகைக்கு ஏற்ப ஒவ்வொரு திருக்கோயில்களிலும் நாள்தோறும் 50 முதல் 300 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

43. இடைப்பட்ட காலத்தில் இத்திட்டம் சரிவர கண்காணிக்கப்படாததால், பயனாளிகளின் எண்ணிக்கை, உணவின் தரம் போன்றவற்றில் மிகுந்த தொய்வு ஏற்பட்டது. இவ்வரசு பொறுப்பேற்றவுடன், **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**, பயனாளிகளின் எண்ணிக்கையை உறுதி செய்வதுடன், உணவின் தரத்தை மேம்படுத்த ஆணையிட்டதோடு, நிதிவசதி மிகுந்த திருக்கோயில்களில் ஞாயிறுதோறும் வடை பாயசத்தோடு மதிய உணவளிக்கவும் உத்தரவிட்டார். மேலும், 106 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தை விரிவுபடுத்த ஆணையிட்டும் இத்திட்டத்திற்கு **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** புத்துயிர் அளித்துள்ளார். அதன்படி, இத்திட்டத்தை செம்மையுறச் செயல்படுத்திட, நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

ஆன்மிகம் மற்றும் ஒழுக்க நன்னெறி வகுப்புகள்

44. அன்னதானத் திட்டம் செயற்படுத்தப்படும் திருக்கோயில்கள் உள்ளிட்ட 485 திருக்கோயில்களில், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை தோறும், சிறுவர் சிறுமியர்க்கு ஆன்மிகம், நீதிநெறி மற்றும் அற ஒழுக்கத்தினைப் பயிற்றுவிப்பதற்கு சான்றோர்களைக் கொண்டு ஆன்மிகம் மற்றும் ஒழுக்க நெறி வகுப்புகள் நடத்தப்பட்டு வந்தன. இடைப்பட்ட காலத்தில், இவ்வகுப்புகள் நடத்துவதில் ஆர்வம் செலுத்தாமல் தொய்வு ஏற்பட்டது. இவ்வரசு பொறுப்பேற்றதும், இத்தொய்வினைக் களைந்து வகுப்புகளைச் செம்மையாக நடத்திடத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஏழை எளியோருக்குத் திருமணம்

45. இந்து சமய அறநிலையத்துறை மூலம் இந்து சமயத்தைச் சார்ந்த, சமுதாயத்தில் நலிவுற்ற ஏழை எளிய மக்களுக்கு நிதி வசதிமிக்க திருக்கோயில்கள் சார்பாக திருமணங்கள் நடத்தி வைக்கப்படுகின்றன. இத்திட்டம் 1981ஆம் ஆண்டு **புரட்சித்தலைவர் எம் ஜி ஆர் அவர்களால்** தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு திருமணத்திற்கும் ரூ.5,500/– செலவு செய்யப்படுகின்றது. இதன் வாயிலாக ஆதிதிராவிடர் வகுப்பினர், பழங்குடி இனத்தவர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பயனடைந்து வருகின்றனர்.

46. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தலைமையில் 14.07.2002 அன்று திருவேற்காட்டில் 1008 இணைகளுக்கும் 18.06.2003 அன்று திருவேற்காட்டில் 1053 இணைகளுக்கும் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன. மேலும் சில திருக்கோயில்களில் 489 இணைகளுக்கும் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன. கடந்த ஆட்சிக் காலத்தில் இத்திட்டம் கைவிடப்பட்டது. இத்திட்டத்தை சீருடன் செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம்

47. மனிதர்கள் மட்டுமல்லாமல் ஏனைய உயிரினங்களும் நம்முடைய அன்புக்கும் உரியவை தான் என்ற கருத்தின் அடிப்படையில், விலங்குகளிடத்திலும் அன்பும், கருணையும் கொண்டுள்ள **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்,** திருக்கோயில்களில் உள்ள யானைகளை தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தாமல் போதுமான ஓய்வு தரப்படவேண்டுமென அறிவுறுத்தியுள்ளார். மேலும், முறையாக பராமரிப்பது குறித்தும் அவற்றின் உடல் நலத்தைக் கண்காணித்து தேவையான மருத்துவ

ஆலோசனையும் சிகிச்சையும் அளிக்க வேண்டுமெனவும் அறிவுரை நல்கியுள்ளார். தமிழ்நாட்டில், திருக்கோயில்களிலும் தனி நபர்களாலும் பராமரிக்கப்பட்டு வரும் யானைகளின் உடல் நிலையைப் பேணி அவற்றிற்குப் புத்துணர்ச்சி அளித்து, உடல்நலனையும் மனநலனையும் காப்பதற்கு ஆண்டுதோறும் அனைத்து யானைகளுக்கும் நலவாழ்வு முகாம்களை நடத்திட 2003ஆம் ஆண்டு ஆணையிட்டார்கள். அதன்படி நீர் ஆதாரங்களும், ஏற்ற சுற்றுச்சூழலும் அமைந்த முதுமலை வனவிலங்குகள் காப்பகத்தில் "யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம்கள்" சிறப்புடன் நடத்தப்பட்டு யானைகளின் உடல்நலமும், மனநலமும் ஆரோக்கியமான சூழ்நிலைக்குக் கொண்டு வரப்பட்டன. இம்முகாமிற்கான முழுச் செலவையும் அரசே ஏற்றுக்கொண்டது. கடந்த 5 ஆண்டுகளில் இத்திட்டம் கைவிடப்பட்டது. இவ்வுயர் நோக்குத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கம்பி வட ஊர்திகள்

48. தென்னக திருக்கோயில்களில் முதன் முறையாக பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் பக்தர்கள் நலனைக் கருதி ஊனமுற்றோர், வயது முதிர்ந்தோர், உடல் நலம் குன்றியோர், சிறு குழந்தைகளோடு வரும் குடும்பத்தார் மற்றும் ஏனைய பலரும் மலைக்கோயிலை எளிதில் சென்றடைந்து இறைவனை வழிபட்டு அருள்பெற ஏதுவாக, ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** கம்பி வட ஊர்தி அமைத்திட ஆணையிட்டார்கள். இந்த கம்பி வட ஊர்தியை 3.11.2004 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, பக்தர்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்கள். கம்பி வட ஊர்தி, பக்தர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது. இதன் காரணமாக பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்கு மேலும் ஒரு கம்பி வட

ஊர்தி அமைத்திட ஆணையிட்டார்கள். பழனியிலுள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு கூடுதலாக மேலும் ஒரு கம்பி வட ஊர்தியும், சோளிங்கரிலுள்ள அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலுக்கு ஒரு கம்பி வட ஊர்தியும் நவீன முறையில் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருப்பணி

49. தமிழ்நாட்டில், ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் பாடிப் போற்றப்பெற்ற பல்வேறு திருத்தலங்கள் உள்ளன. வரலாற்று சிறப்பு மிக்க, தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களையும் புகழ்பெற்ற வழிபாட்டுத்தலங்களையும் கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில்களையும் ஆதிதிராவிடர்கள், பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதிகளிலுள்ள சிறிய திருக்கோயில்களையும் நன்முறையில் பேணிப் பாதுகாத்திட அவற்றிற்கு திருப்பணி செய்வது இன்றியமையாததாகும்.

50. இதனை மனதில் கொண்டு பின்வரும் நிதி ஆதாரங்களின் அடிப்படையில் திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:

1. பொதுமக்கள் அளிக்கும் நன்கொடை
2. திருக்கோயில்களின் சொந்த நிதி
3. நிதிமாற்ற நிதி
4. அரசு மானியம்
5. பொதுநல நிதி
6. ஆலய மேம்பாட்டு நிதி
7. கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி
8. திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி

9. உபயத் திருப்பணி

10. நிதி ஆணைய நிதி

11. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்களுக்கான திருப்பணி நிதி

12. சுற்றுலாத் துறை நிதி

பொதுமக்கள் அளிக்கும் நன்கொடை

51. இந்து சமயம் மற்றும் ஆன்மிகத்தில் ஈடுபாடு கொண்டவர்கள், தொழிலதிபர்கள், செல்வந்தர்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள், மனமுவந்து அளிக்கும் நன்கொடைத் தொகையைக் கொண்டு பெரும்பாலான திருக்கோயில்களின் திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திருக்கோயில்களின் சொந்த நிதி

52. நிதிவசதியுள்ள திருக்கோயில்களில் பெரும்பாலான திருப்பணிகள் அந்தந்தத் திருக்கோயில்களின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன.

நிதிமாற்ற நிதி

53. தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தின் 36ஆம் பிரிவின்படி, நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதிவசதியற்ற திருக்கோயில்களுக்குத் திருப்பணிகளை மேற்கொள்ள நிதிமாற்றம் செய்யப்படுகின்றது.

அரசு மானியம்

54. ஒவ்வொரு ஆண்டும் திருக்கோயில்களில் பழுதுபார்ப்பு, சீரமைப்புப் பணிகளுக்காக அரசு மூலமாக ரூ. 3 கோடி மானியம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

பொதுநல நிதி

55. இந்து சமய நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களால் தானாக முன்வந்து அளிக்கும் நன்கொடைகளைக் கொண்டு ஆணையரின் பதவிப் பெயரில் “பொதுநல நிதி” ஏற்படுத்த தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தின் **97**ஆம் பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வகையில் பெறப்படும் இப்பொதுநலநிதி திருக்கோயில்களைப் பராமரிப்பதற்கும், திருப்பணிகளை மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படுகிறது.

ஆலய மேம்பாட்டு நிதி

56. நிதிவசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.**8** கோடி பெறப்பட்டு, வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டது. இவ்வைப்பு நிதியிலிருந்து பெறப்படும் வட்டித்தொகையினைக் கொண்டு, தொன்மை வாய்ந்ததும், வரலாற்று முக்கியத்துவம் பெற்றதும், நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களால் பாடப்பெற்ற மங்களாசாசனம் பெற்றதுமான திருக்கோயில்களைப் புதுப்பிப்பதற்கும், திருப்பணிகளை மேற்கொள்வதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி

57. கிராமப்புறக் கோவில்களைப் புதுப்பிப்பதற்கான நிரந்தர நடவடிக்கையாக பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூ.**2** கோடி ஒதுக்கீடு செய்து நிலை வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டது. இந்த வைப்பு நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையின் மூலம் இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சிறிய கிராமப்புற திருக்கோயில்களின் திருப்பணிக்கு நிதியுதவி வழங்கிட ஒரு நிரந்தர ஏற்பாடாக “கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணித் திட்டம்” ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ. **25,000/–** நிதியுதவி வழங்கப்படுகிறது.

திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி

58. நமது கலை, தொல் மரபு பண்பாட்டை பேணிக்காக்க வேண்டும் என்னும் சீரிய நோக்கில் **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** தமது சொந்த நிதியிலிருந்து ரூ.1,00,008/—ஐ அளித்து "முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி" என்ற நிதியை 5.8.1991ல் உருவாக்கினார்கள். மேலும், இந்நிதிக்கு தொண்டுள்ளம் கொண்ட நன்கொடையாளர்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் நன்கொடைகள் பெறப்பட்டன. இந்நிதி "திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி" என பின்னாளில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்நிதி தொன்மை வாய்ந்த திருக்கோயில்களின் திருப்பணிக்குப் பயன்படுத்தப்படுகிறது.

உபயத் திருப்பணி

59. திருக்கோயில்களின் திருப்பணியை பக்தர்கள் தாமே முன்வந்து நன்கொடைப் பணியாக ஏற்று, இத்துறையின் கண்காணிப்புக்குட்பட்டு செய்வது வழக்கத்தில் இருந்து வருகிறது.

நிதி ஆணைய நிதியுதவி

60. வரலாற்று சிறப்பு மிக்க, தொன்மை வாய்ந்த திருக்கோயில்களை அவற்றின் தொன்மை மாறாமல் புதுப்பிக்கும் திட்டத்தின்படி பன்னிரெண்டாம் நிதி ஆணையம் ரூ.9.87 கோடி நிதி உதவி அளித்தது. இந்நிதியைப் பயன்படுத்தி 46 திருக்கோயில்களின் திருப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய அரசின் பதிமூன்றாம் நிதி ஆணையம் மூலமாக இந்த நிதியாண்டில் 89 திருக்கோயில்களைப் புனரமைப்பதற்கு 22.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியை முறையாகப் பயன்படுத்தி, தொன்மை வாய்ந்த திருக்கோயில்களை அதன் பழைமை மாறாது புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்களுக்கான திருப்பணி

61. இந்து சமய அறநிலையத்துறை ஆளுகையில் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் குடியிருப்புப் பகுதிகளில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில்களில் திருப்பணி செய்திட, நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி பெறப்பட்டு திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/– வீதம் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

சுற்றுலாத்துறை நிதி

62. திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு தேவையான கழிப்பறை, குளியலறை, தங்கும் கூடம், குடிநீர், தகவல் மையங்கள், அணுகு சாலைகள், உயர்கோபுர மின் விளக்குகள், பொருட்கள் பாதுகாப்பு அறை, புல்வெளி அமைப்பு, வாகன நிறுத்துமிடம் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க, சுற்றுலாத்துறை ஒரு பகுதி நிதியுதவி வழங்குகிறது. இந்நிதியோடு திருக்கோயில்களின் பங்களிப்பையும் சேர்த்து பக்தர்களோடு சுற்றுலாப் பயணிகளும் பயன் பெறும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருக்குடமுழுக்கு

63. ஆகம விதிகளின்படி ஒவ்வொரு திருக்கோயிலிலும் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருப்பணி செய்து திருக்குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும். பொதுவாக, திருக்கோயில்கள் கீழ்க்கண்டவாறு பகுக்கப்பட்டு திருப்பணிகள் செய்து திருக்குடமுழுக்கு நடத்தப்படுகின்றன.

i. ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற மற்றும் நாயன்மார்களால் பாடப் பெற்ற திருக்கோயில்கள்.

ii. வரலாற்று புகழ்பெற்ற, தொன்மை வாய்ந்த மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள்.

iii. வேண்டுதல் முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள்.

iv. கிராமப்புற மற்றும் பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் வாழும் பகுதியில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில்கள்.

64. தமிழகத்தில் நாயன்மார்களால் பாடப் பெற்ற திருக்கோயில்களும் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருக்கோயில்களும் தொன்மையான மற்றும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த திருக்கோயில்களும் பெருமளவில் உள்ளன. இவைகளில் திருப்பணி செய்ய வேண்டிய அனைத்து திருக்கோயில்களையும் விரைவில் சீரமைப்பு செய்து குடமுழுக்கு நடத்திடவும் இவ்வாண்டில் **1006** திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து திருக்குடமுழுக்கு செய்யவும் இவ்வரசு பொறுப்பேற்றவுடன் **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால்** ஆணையிடப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

மழைநீர் சேகரிப்பும் திருக்குளத் திருப்பணியும்

65. 2002–2003ஆம் ஆண்டு மேதகு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்ட **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** திட்டங்களில் ஒன்றான மழை நீர் சேகரிப்புத் திட்டத்தினை இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் உள்ள திருக்கோயில் திருக்குளங்களில் செம்மையுற நிறைவேற்றப்பட்டன. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் **38,481** திருக்கோயில்களும் மற்றும் சமய நிறுவனங்களும் உள்ளன. இவற்றில் **1,586** திருக்கோயில்களில் மட்டும் **2,359** திருக்குளங்கள் உள்ளன. இவற்றில் **1,291** திருக்குளங்கள் நல்ல நிலையில் உள்ளன. எஞ்சிய **1,068** திருக்குளங்கள் சீரமைக்க வேண்டியும், மழைநீர்

சேகரிப்பு திட்டத்தை நிறைவேற்ற வேண்டியும் உள்ளன. இச்செயற்பாடுகளில் கடந்த சில ஆண்டுகளில் சுணக்கம் ஏற்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர், இத்திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கும் நோக்கத்துடன் கீழ்க்கண்ட வழிமுறைகளில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. திருக்குளங்களில் உள்ளும் புறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.
2. திருக்குளங்களைச் சுற்றி சுற்றுச்சுவர் அல்லது வேலி அமைத்தல்.
3. தூர் எடுத்தல் மற்றும் ஆழப்படுத்துல்.
4. திருக்குளங்களில் உள்ள படிகளைச் சீரமைத்தல்
5. திருக்குளங்களுக்கு மழை நீர் வருவதற்கு வழி ஏற்படுத்துதல்.

கால பூஜைகளை புதுப்பித்தல்

66. வரலாற்றுச் சிறப்புமிக்க பாடல் பெற்ற தொன்மைமிகுந்த நலிவுற்ற திருக்கோயில்கள் சிலவற்றில் கால பூஜைகளை செய்வதில் ஏற்பட்ட குலைவினை கருத்தில் கொண்டு, நிதிவசதி மிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து முழு அளவிலான கால பூஜைகளை செய்திட **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 2005**ஆம் ஆண்டு ஆணையிடப்பட்டது. அதன் பயனாக, 22 நலிந்த திருக்கோயில்களுக்கு நிதி வசதி மிக்க திருக்கோயில்களிலிருந்து நிதி உதவி செய்யப்பட்டது. இத்திட்டம் முந்தைய அரசால் கைவிடப்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்றதும், இச்சீர்மிகு திட்டத்திற்கு புத்துயிர் அளித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தங்கரதமும் வெள்ளிரதமும்

67. திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் தங்கள் வேண்டுதலை நிறைவேற்ற உற்சவமூர்த்தியை தங்கரதத்திலும் வெள்ளிரதத்திலும் எழுந்தருளச் செய்து, இரதம் இழுப்பது வழக்கத்தில் இருந்து வருகிறது. கீழ்க்கண்ட 51 திருக்கோயில்களில் தங்கரதமும், 38 திருக்கோயில்களில் வெள்ளிரதமும் பயன்பாட்டில் உள்ளன.

தங்கரதம் உள்ள திருக்கோயில்கள்

1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி
2.	அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், பூங்காநகர், சென்னை
3.	அருள்மிகு வடபழனியாண்டவர் திருக்கோயில், வடபழனி
4.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி
5.	அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு
6.	அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில், சுவாமிமலை
7.	அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில், வைதீஸ்வரன் கோயில்
8.	அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஈச்சநாரி, கோயம்புத்தூர்
9.	அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், திருச்சி
10.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை
11.	அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயில், சங்கரன் கோயில்
12.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்

13.	அருள்மிகு வானமாமலைப் பெருமாள் திருக்கோயில், நாங்குநேரி
14.	அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம்
15.	அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், இரத்தினகிரி
16.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை
17.	அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர்
18.	அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு
19.	அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்
20.	அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர்
21.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை
22.	அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி
23.	அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை
24.	அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில், திருவான்மியூர், சென்னை
25.	அருள்மிகு வேலாயுதசுவாமி திருக்கோயில், திண்டல்மலை, ஈரோடு
26.	அருள்மிகு அனந்தபத்மநாபசுவாமி திருக்கோயில், அடையாறு
27.	அருள்மிகு கருநெல்லிநாதசுவாமி திருக்கோயில், திருத்தங்கல், சிவகாசி
28.	அருள்மிகு முண்டகக்கண்ணியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை
29.	அருள்மிகு வேங்கடாஜலபதி திருக்கோயில், ஒப்பிலியப்பன்கோயில், கும்பகோணம்

30.	அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்
31.	அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கரூர்
32.	அருள்மிகு தண்டு மாரியம்மன் திருக்கோயில், கோயம்புத்தூர்
33.	அருள்மிகு சந்திரசூடேஸ்வரர் திருக்கோயில், ஓசூர்
34.	அருள்மிகு ஜெம்புகேசுவரர் மற்றும் அகிலாண்டேசுவரியம்மன் திருக்கோயில், திருவானைக்காவல்
35.	அருள்மிகு ஆஞ்சநேய சுவாமி திருக்கோயில், நாமக்கல்
36.	அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், பச்சைமலை, கோபிச்செட்டி பாளையம்.
37.	அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில், அரியாக்குறிச்சி
38.	அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்மன் திருக்கோயில், திருநெல்வேலி
39.	அருள்மிகு கண்ணுடைய நாயகியம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை, சிவகங்கை
40.	அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு, நாமக்கல்.
41.	அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில், உறையூர், திருச்சிராப்பள்ளி
42.	அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம்.
43.	அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், சேலம்
44.	அருள்மிகு முருகன் திருக்கோயில், சோலைமலை மண்டபம், அழகர்கோயில், மதுரை

45.	அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில், சோளிங்கர், வேலூர்
46.	அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர், திருவள்ளூர்
47.	அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல்
48.	அருள்மிகு அங்காள பரமேஸ்வரி திருக்கோயில், மேல்மலையனூர், விழுப்புரம்
49.	அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில், பாரியூர், ஈரோடு
50.	அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், திருப்போரூர், செங்கற்பட்டு, காஞ்சிபுரம்
51.	அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை, கோயம்புத்தூர்

வெள்ளி ரதம் உள்ள திருக்கோயில்கள்

1.	அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி
2.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்
3.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை
4.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி
5.	அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்
6.	அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை
7.	அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை

8.	அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயில் திருநெல்வேலி
9.	அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிபுலியூர்
10.	அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன் கோயில்
11.	அருள்மிகு சட்டநாதசுவாமி திருக்கோயில், சீர்காழி
12.	அருள்மிகு மயூரநாதசுவாமி திருக்கோயில், மயிலாடுதுறை
13.	அருள்மிகு மாரியம்மன், அங்காளம்மன் திருக்கோயில், பொள்ளாச்சி
14.	அருள்மிகு பிரசன்ன விநாயகர் திருக்கோயில், உடுமலைப்பேட்டை
15.	அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு
16.	அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில், மணவாளநல்லூர்
17.	அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம்
18.	அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம்
19.	அருள்மிகு முத்துகுமாரசுவாமி திருக்கோயில், பார்க்டவுன், சென்னை
20.	அருள்மிகு திருவேங்கடமுடையான் திருக்கோயில், அரியக்குறிச்சி
21.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், குன்றக்குடி
22.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், கீழச்செவல்பட்டி
23.	அருள்மிகு கண்ணுடையநாயகியம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை

24.	அருள்மிகு கொப்புடையநாயகியம்மன் திருக்கோயில், காரைக்குடி
25.	அருள்மிகு நகரசிவன் என்ற மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், தேவகோட்டை
26.	அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், கொன்னையூர், திருமயம் வட்டம்
27.	அருள்மிகு ஆருத்ர கபாலீஸ்வரர் திருக்கோயில், ஈரோடு நகர்
28.	அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில், பவானி
29.	அருள்மிகு பழனியாண்டவர் திருக்கோயில், பவானி
30.	அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், ஆயக்குடி, திருநெல்வேலி
31.	அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், தொட்டியம்
32.	அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், நெய்வேலி, பண்ருட்டி
33.	அருள்மிகு வெயிலுக்கு உகந்த விநாயகர் திருக்கோயில், உப்பூர், இராமநாதபுரம்
34.	அருள்மிகு சௌந்திரராஜப்பெருமாள் திருக்கோயில், திண்டுக்கல்
35.	அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், குமரக்கோட்டம், காஞ்சிபுரம்
36.	அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், எட்டுக்குடி, நாகப்பட்டினம்
37.	அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் மற்றும் தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், செட்டிக்குளம், பெரம்பலூர்
38.	அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காரைக்குடி நகர் மற்றும் வட்டம், சிவகங்கை

திருத்தேர்களைப் பாதுகாத்தலும் பராமரித்தலும்

68. இத்துறை கட்டுப்பாட்டில் உள்ள 809 திருக்கோயில்களில் 989 மரத்தேர்கள் உள்ளன. பிப்ரவரி 2006ஆம் ஆண்டு 241 திருத்தேர்களை ரூ. 11.17 கோடி மதிப்பீட்டில் செப்பனிட நிதி வசதி மிக்க திருக்கோயில்களின் உபரிநிதி மூலம் வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டது. இதன் பயனாக 91 திருத்தேர்கள் செப்பனிடப்பட்டு புதுப்பிக்கப்பட்டன. தற்போது மொத்தம் 686 திருத்தேர்கள் நல்ல நிலையில் உள்ளன. எஞ்சிய 303 திருத்தேர்களில் 25 திருத்தேர்களுக்கான சீரமைப்பு பணிகள் நடைபெறுகின்றன. இதர 278 திருத்தேர்களுக்கான திருப்பணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இவைகளை சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருத்தேர்களை பாதுகாக்கும் பொருட்டு தீப்பிடிக்காத தகடுகளால் கூரை, இரும்பு அச்சு, சக்கரம் ஆகியவற்றைச் செய்யவும், திருத்தேர்களுக்கு காப்பீடுகள் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் திருத்தேர்களைச் சீரமைத்து, தடைப்பட்டு நின்று போன தேர்த் திருவிழாக்களை நடத்தவும் திருத்தேர்களை பாதுகாக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்

69. இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத, கிராமத் திருக்கோயில்களில் பூஜை செய்யும் பூசாரிகளுக்காக தனியாக "கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியம்" என்ற ஒரு வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நல வாரியம் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சரை தலைவராகவும் 10 அலுவல்சார் உறுப்பினர்களையும் 9 அலுவல்சாரா உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.

70. இந்த நல வாரியம் மூலமாக கிராமக்கோயில் பூசாரிகளுக்கு பின்வரும் உதவிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் உதவி பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.24,000/– ஆகும்.

வ. எண்.	நலத்திட்ட வாயிலாக வழங்கப்படும் உதவிகள்	தொகை
1.	மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கு	ரூ.500/–
2.	பூசாரியின் மனைவி(அ) மகளின் மகப்பேறு–கருச்சிதைவு போன்றவற்றுக்கு	ரூ.6000/–
3.	பூசாரியின் குழந்தைகளின் உயர் கல்விக்கு	ரூ.1000/–முதல் ரூ.6000/– வரை
4.	பூசாரியின் திருமணத்திற்கு அல்லது அவர்களின் மகன்/மகளின் திருமணத்திற்கு	ரூ.6000/–
5.	உறுப்பினர் மரணமடைந்தால் அவரது இறுதிச் சடங்கிற்கு	ரூ.2,000/–
6.	அவரது வாரிசுதாரருக்கு நிதியுதவி	ரூ.15,000/–

ஒருகால பூஜைத் திட்டம்

71. ஒருகால பூஜையைக்கூட நிறைவேற்ற இயலாத நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு, ஒருகால பூஜையினை செய்திட உதவும் வகையில் இத்திட்டம் **1986**ஆம் ஆண்டு முதல் செயற்படுகிறது. இத்திட்டத்தில் பொதுமக்களும் பங்குபெறும் நோக்கில் **1993**ஆம் ஆண்டு **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால்** பொதுமக்கள் நன்கொடையாக திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.2,500/– அளித்தால், நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.20,000/–, திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணியிலிருந்து

ரூ.1,300/–, ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1,200/–, துறை நிதியாக மொத்தம் ரூ.22,500/– ஆக மொத்தம் ரூ.25,000/–ஐ கொண்டு நிலை முதலீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம்முதலீட்டில் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து குறிப்பிட்ட திருக்கோயிலில் ஒரு கால பூஜை நாள்தோறும் நடைபெற வழி வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி இதுவரை 11,931 திருக்கோயில்கள் பயன் அடைந்து வருகின்றன.

72. நாள்தோறும் ஒரு கால பூஜை செய்வதற்கு மேற்கண்ட நிலை வைப்புத் தொகையான ரூ. 25,000/–க்கான வட்டித் தொகை தற்போது போதுமானதாக இல்லை. என்வே, கடந்த சில ஆண்டுகளாக இத்திட்டத்தை செயல்படுத்துவதில் தொய்வு ஏற்பட்டுள்ளதுடன், இத்திட்டத்தின் நோக்கத்தையும் நிறைவேற்ற இயலவில்லை. ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் செய்யப்பட்ட நிலை வைப்பீடான ரூ. 25,000/–லிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ஒருகால பூஜை முறையாகச் செய்ய இயலவில்லை என்பதை இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் அறிந்த **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்,** இத்திட்டத்தை முழுமையாக செம்மையுடன் நிறைவேற்றிட ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் நிரந்தர வைப்புத் தொகை ரூ. 1,00,000/– என உயர்வு செய்து ஆணையிட்டுள்ளார்கள். இத்தொகையிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு நாள்தோறும் ஒருகால பூஜையை செம்மையாகச் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள்

I. குடிநீர் வசதி

73. திருக்கோயில்களுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு சுத்தமான, சுகாதாரமான குடிநீர் வழங்கவும், தேவையான இடங்களில்

சுத்தமான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

II. கழிப்பறை வசதி

74. திருக்கோயில்களுக்கு வரும் ஆடவர்க்கும் மகளிர்க்கும் தனித்தனியாக நவீன கழிப்பிட வசதிகளைச் செய்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

III. தங்கும் வசதிகள்

75. திருக்கோயில்களுக்கு பெருமளவில் வரும் பக்தர்களின் தேவைக்கேற்ப போதிய அளவில் தங்குவதற்குத் தேவையான குடில்கள், அறைகள், கூடங்கள், பொருட்கள் வைப்பறைகள், வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகிய வசதிகளைச் செய்து தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

IV. திருக்கோயில்களைத் தூய்மையாகப் பேணுதல்

76. திருக்கோயில்களைத் தூய்மையாகப் பராமரிக்க ஏதுவாக தனியார் நிறுவனங்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் திருக்கோயில் தூய்மைப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

புடவை/வேட்டி வழங்குதல்

77. முக்கிய திருக்கோயில்களில் காணிக்கையாக செலுத்தப்படும் பருத்தி நூல் புடவை மற்றும் வேட்டிகளை, முதியோர், ஆதரவற்றோர் மற்றும் விதவைத் தாய்மார்களுக்கு சுதந்திர தினத்தன்றும், அண்ணா நினைவு நாளன்றும் திருக்கோயில்களில் நடைபெறும் பொது விருந்து நிகழ்ச்சிகளின் போதும் வழங்கப்படுகின்றன.

உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்கள் பாதுகாப்பு

78. திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்களைப் பாதுகாத்திட களவு எச்சரிக்கை மணி, நேர ஒலிப்பு கடிகாரம், உள் பூட்டு முறை மற்றும் இரும்புவாயிற் கதவுகள் நிறுவுதல், கண்காணிப்பு ஒளிப்படக் கருவிகள் பொருத்துதல், இரவுக் காவலர்கள் நியமனம், திருக்கோயில்கள் பாதுகாப்புப்படை நியமனம் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

79. விலை மதிக்க இயலாத உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட திருக்கோயில்களில், உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பாதுகாப்பு வசதிகள் குறைவாக உள்ள திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள் இப்பாதுகாப்பு மையங்களில் வைத்து பாதுகாக்கப்படுகின்றன. திருவிழாக் காலங்களில் அவற்றை எடுத்துச் சென்று விழா முடிந்ததும் மீண்டும் பாதுகாப்பு மையத்தில் ஒப்படைப்பு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு மையத்தில் உள்ள அனைத்து உலோகத் திருமேனிகளுக்கு பூஜைகள் செய்யப்பட்டு வருகின்றன.

உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் விவரம்

1. திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையம் (அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் வளாகம்).
2. அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனுறை ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி.
3. அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயில், திருநெல்வேலி.

4. அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோயில், சேலம்.
5. அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காந்திநகர், வேலூர்.
6. அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை.
7. அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம்.
8. அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிபுலியூர், கடலூர்.
9. அருள்மிகு நாகேஸ்வரசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், கும்பகோணம்.
10. அருள்மிகு பட்டீஸ்வர சுவாமி திருக்கோயில், பேரூர், கோயமுத்தூர்.
11. அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில், திருகோகர்ணம், புதுக்கோட்டை.
12. அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயில், செல்லூர், மதுரை.
13. அருள்மிகு சுந்தரராஜ பெருமாள் திருக்கோயில், சிவகங்கை.
14. அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர் (கூடுதல் மையம்).
15. அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர்.
16. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி.
17. அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், அதியமான்கோட்டை, தர்மபுரி.
18. அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், விழுப்புரம்.
19. அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர்.

திருக்கோயில் பாதுகாப்புப் படை

80. திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள், நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருள்கள், உண்டியல்கள் ஆகியவற்றின் பாதுகாப்புக்காக **“திருக்கோயில் பாதுகாப்புப்படை”** என்ற தனிப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் 1000 இரண்டாம் நிலை காவலர்களையும், 3000 முன்னாள் படைவீரர்களையும் நியமனம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டது. 2005–2006ஆம் ஆண்டுகளில் 1000 இரண்டாம் நிலை காவலர்களும், 2751 முன்னாள் படை வீரர்களும் பாதுகாப்பு படையில் பணிபுரிந்தனர். கடந்த ஆண்டுகளில் திருக்கோயில் பாதுகாப்பில் போதிய ஆர்வம் செலுத்தாததால் இந்த எண்ணிக்கை தற்போது 717 காவலர்கள், 1806 முன்னாள் படைவீரர்கள் எனக் குறைந்து விட்டது. இப்பிரிவில் பணிபுரிவோரின் எண்ணிக்கை குறைந்துள்ளதை ஈடுசெய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கருணை இல்லங்கள்

81. ஆதரவற்ற சிறார்களுக்கு உணவு, இருப்பிடம், கல்வி ஆகிய உதவிகள் அளிப்பதோடு அன்பும் ஆதரவும் அளிக்கும் நோக்கத்துடன் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் திருக்கோயில்களில் கருணை இல்லங்கள் தொடங்கப்பட்டன. 2005–2006ஆம் ஆண்டுகளில் இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 37 திருக்கோயில்களில் 42 கருணை இல்லங்கள் செயல்பட்டு வந்தன. கடந்த சில ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 31 திருக்கோயில்களில் 34 கருணை இல்லங்கள் எனக் குறைந்து விட்டது. இந்தக் கருணை இல்லங்களில் ஆர்வம் செலுத்தாத நிலையைக் களைந்து இதற்கு புத்துயிர் அளிக்கவும், இவைகளை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கல்வி நிறுவனங்களும் பிற நிறுவனங்களும்

82. திருக்கோயில்களில் நடைபெறும் இறைபணியோடு, தெய்வ நெறிகளை கடைபிடிக்கத் தேவையான கட்டுப்பாட்டினையும் பண்பாடு மற்றும் சமயக் கோட்பாடுகளையும் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் சமூக நோக்கோடு சமயம் மற்றும் பொதுக் கல்வி தொடர்பான பள்ளிகளையும் கல்லூரிகளையும் பாடசாலைகளையும் திருக்கோயில் நிருவாகங்கள் பேணி வருகின்றன. அவைகள் பின்வருமாறு.

அ. கல்வி நிறுவனங்கள்

1.	கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள்	:	5
2.	தொழில்நுட்பக் கல்லூரி	:	1
3.	மேல் நிலைப்பள்ளிகள்	:	15
4.	உயர்நிலைப் பள்ளிகள்	:	8
5.	நடுநிலைப்பள்ளிகள்	:	2
6.	தொடக்கப் பள்ளிகள்	:	9
7.	பதின்மப் பள்ளி (Matriculation School)	:	1
8.	மத்திய அரசுத் திட்ட மேனிலைப் (CBSE) பள்ளி	:	1
9.	நாதசுரம் தவில் பள்ளிகள்	:	2
10.	வேத ஆகமப் பாடசாலைகள்	:	3
11.	தேவாரப் பாடசாலைகள்	:	2
12.	காதுகேளாதோர் மற்றும் பேச இயலாதோர் பள்ளி	:	1
	மொத்தம்	:	**50**

ஆ. சமூக நல நிறுவனங்கள்

1.	சித்த வைத்தியசாலைகள்	:	7
2.	ஆங்கில மருத்துவமனைகள்	:	2
3.	மனநல காப்பகம்	:	1
4	கருணை இல்லங்கள்	:	34
5	முதியோர் இல்லங்கள்	:	2
	மொத்தம்	:	46

கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூக நல நிறுவனங்கள் விவரப் பட்டியல் பின்வருமாறு:

கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள்

1. அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழனி, திண்டுக்கல் மாவட்டம்
2. அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, பழனி, திண்டுக்கல் மாவட்டம்
3. ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம்.
4. ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரி, குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்
5. பூம்புகார் கல்லூரி, மேலையூர், நாகப்பட்டினம் மாவட்டம்

தொழில்நுட்பக் கல்லூரி

1. அருள்மிகு பழனியாண்டவர் பல்தொழில்நுட்பக் (Polytechnic) கல்லூரி, பழனி, திண்டுக்கல் மாவட்டம்

மேனிலைப்பள்ளிகள்

1. அருள்மிகு பெரியநாயகியம்மன் மகளிர் மேனிலைப்பள்ளி, கோவிலூர், முத்துப்பேட்டை, திருவாரூர் மாவட்டம்
2. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மேனிலைப்பள்ளி, மருதமலை, வடவள்ளி, கோயம்புத்தூர் மாவட்டம்
3. அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் மேனிலைப்பள்ளி, அய்யம்பாளையம், சாமளாபுரம், சோமனூர், திருப்பூர் மாவட்டம்
4. அருள்மிகு பேரூர் சாந்தலிங்க அடிகளார் மேனிலைப்பள்ளி, பேரூர், கோயம்புத்தூர் மாவட்டம்
5. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் பெண்கள் மேனிலைப்பள்ளி, மதுரை மாவட்டம்
6. அருள்மிகு ஆண்டவர் சுப்பிரமணிய சுவாமி பெண்கள் மேனிலைப்பள்ளி, திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம்
7. அருள்மிகு திருமலை குமாரசுவாமி தேவஸ்தான பெண்கள் மேனிலைப்பள்ளி, குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம்
8. தேவஸ்தான மேனிலைப்பள்ளி, மண்டைக்காடு, கன்னியாகுமரி மாவட்டம்
9. ஸ்ரீ காந்திமதி அம்பாள் மகளிர் மேனிலைப்பள்ளி, திருநெல்வேலி மாவட்டம்
10. டி.வேணுகோபால் செட்டி மேனிலைப்பள்ளி, சென்னை மாவட்டம்
11. இந்து மேனிலைப்பள்ளி, சென்னை மாவட்டம்
12. அருள்மிகு ஸ்ரீ பர்வதவர்தினி அம்பாள் பெண்கள் மேனிலைப்பள்ளி, இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம்

13. அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் மேனிலைப்பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம் மாவட்டம்
14. ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் மேனிலைப்பள்ளி, மயிலம், திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம்
15. அருள்மிகு பராசக்தி வித்யாலயா மேனிலைப்பள்ளி, குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம்

உயர்நிலைப் பள்ளிகள்

1. அருள்மிகு அஞ்சுவட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப்பள்ளி, கீழ்வேளூர், திருவாரூர் மாவட்டம்
2. அருள்மிகு கலியுகவரதராஜப்பெருமாள் .பெண்கள் உயர்நிலைப்பள்ளி, கல்லங்குறிச்சி, அரியலூர் மாவட்டம்
3. அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் பெண்கள்உயர்நிலைப்பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம் மாவட்டம்
4. அருள்மிகு சுந்தர்ராசா உயர்நிலைப்பள்ளி, அழகர்கோயில், மதுரை மாவட்டம்
5. தேவஸ்வம் உயர்நிலைப்பள்ளி, திற்பரப்பு, கன்னியாகுமரி மாவட்டம்
6. ஸ்ரீ திருஞான சம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, தருமபுரம், நாகப்பட்டினம் மாவட்டம்
7. அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான உயர்நிலைப்பள்ளி, சென்னை மாவட்டம்
8. தேவஸ்வம் உயர்நிலைப்பள்ளி, குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்

நடுநிலைப் பள்ளிகள்

1. திருவாவடுதுறை ஆதினம் நடுநிலைப்பள்ளி, திருவாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம்
2. திருவாவடுதுறை ஆதினம் அம்பலவாண தேசிகர் நடுநிலைப்பள்ளி, திருவாவடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம்

தொடக்கப் பள்ளிகள்

1. சுவாமி நெல்லையப்பர் அன்பு ஆசிரமம் தொடக்கப்பள்ளி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்
2. சங்கரநாராயண சுவாமி திருக்கோயில் தொடக்கப்பள்ளி, சங்கரன்கோயில், திருநெல்வேலி மாவட்டம்
3. ஸ்ரீ மெய்கண்டார் தொடக்கப்பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம் மாவட்டம்
4. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் உதவிபெறும் தொடக்கப்பள்ளி, பழனி, திண்டுக்கல் மாவட்டம்
5. திருவாவடுதுறை ஆதினம் தொடக்கப்பள்ளி, திருவிடை மருதூர், தஞ்சாவூர் மாவட்டம்
6. திருஞான சம்பந்தர் தொடக்கப்பள்ளி, தருமபுரம், நாகப்பட்டினம் மாவட்டம்
7. அருள்மிகு சுந்தரராசா தொடக்கப்பள்ளி, அழகர்கோயில், மதுரை மாவட்டம்
8. அஞ்சுகம் தொடக்கப்பள்ளி, கோடம்பாக்கம், சென்னை மாவட்டம்
9. பத்மாவதி கண்ணபிரான் தொடக்கப்பள்ளி, ஓட்டேரி, சென்னை மாவட்டம்

பதின்மப் பள்ளி (Matriculation School)

1. பழனி ஆண்டவர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி, பழனி, திண்டுக்கல் மாவட்டம்

மத்திய அரசுத்திட்ட மேனிலைப் (CBSE) பள்ளி

1. பராசக்தி வித்யாலாயா, குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம்

நாதஸ்வரமும் தவிலும் – இசைப் பயிற்சிப் பள்ளிகள்

1. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம்
2. அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், தஞ்சாவூர் மாவட்டம்

வேத ஆகமப் பாட சாலைகள்

1. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம்
2. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம்
3. அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன்கோவில், நாகப்பட்டினம் மாவட்டம்

தேவார இசைப் பயிற்சிப் பள்ளிகள்

1. தருமபுர ஆதீனம், தருமபுரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம்
2. மருதநாயக முதலியார் அன்னபூரணி அம்மாள் டிரஸ்ட், கோயம்புத்தூர் மாவட்டம்

காது கேளாதோர் – பேச இயலாதோர் பள்ளி

1. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம்

சித்த வைத்தியசாலைகள்

1. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம்
2. அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், வடபழனி, சென்னை மாவட்டம்
3. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மருதமலை, கோயம்புத்தூர் மாவட்டம்
4. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம்
5. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம்
6. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம்
7. அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம்

ஆங்கில முறை மருத்துவமனைகள்

1. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம்
2. அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயில், பிள்ளையார்பட்டி, சிவகங்கை மாவட்டம்

மனநல காப்பகம்

1. அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில், குணசீலம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்

கருணை இல்லங்கள்

வ. எண்	இடம்	திருக்கோயில் விவரம்	கருணை இல்லங்களின் எண்ணிக்கை	
			சிறுவர்	சிறுமியர்
1.	திருவேற்காடு திருவள்ளூர் மாவட்டம்	அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில்	1	–
2.	திருத்தணி திருவள்ளூர் மாவட்டம்	அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்	1	1
3.	பழனி, திண்டுக்கல் மாவட்டம்	அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்	1	1
4.	சமயபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்	அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்	1	–
5.	மதுரை மாவட்டம்	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்	–	1
6.	திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம்	அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்	1	–
7.	இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம்	அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில்	1	–
8.	மயிலாப்பூர், சென்னை மாவட்டம்	அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில்	1	–
9.	மருதமலை, கோயம்புத்தூர் மாவட்டம்	அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்	1	–
10.	பண்ணாரி, ஈரோடு மாவட்டம்	அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில்	1	1
11.	அழகர்கோவில், மதுரை மாவட்டம்	அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்	–	1
12.	சோளிங்கர், வேலூர் மாவட்டம்	அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில்	1	–

வ. எண்	இடம்	திருக்கோயில் விவரம்	கருணை இல்லங்களின் எண்ணிக்கை	
			சிறுவர்	சிறுமியர்
13.	திருவண்ணாமலை மாவட்டம்	அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில்	1	–
14.	சுவாமிமலை, தஞ்சாவூர் மாவட்டம்	அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில்	1	–
15.	சேலம் மாவட்டம்	அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில்	1	–
16.	தேக்கம்பட்டி, கோயம்புத்தூர் மாவட்டம்	அருள்மிகு வனபத்ர காளியம்மன் திருக்கோயில்	1	–
17.	அய்யம்பாளையம், திருப்பூர் மாவட்டம்	அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் திருக்கோயில்	1	–
18.	திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம்	அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்	–	1
19.	ஒப்பிலியப்பன் கோயில், தஞ்சாவூர் மாவட்டம்	அருள்மிகு வெங்கிடாசலபதி சுவாமி திருக்கோயில்	–	1
20.	மணவாளநல்லூர், கடலூர் மாவட்டம்	அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில்	1	–
21.	திருநாகேஸ்வரம், தஞ்சாவூர் மாவட்டம்	அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில்	1	–
22.	கொடுமுடி, ஈரோடு மாவட்டம்	அருள்மிகு மகுடேஸ்வர சுவாமி வீரநாராயணப் பெருமாள் திருக்கோயில்	1	–
23.	ஈச்சனாரி, கோயம்புத்தூர் மாவட்டம்	அருள்மிகு விநாயகர் திருக்கோயில்	1	–
24.	பேரூர், கோயம்புத்தூர்	அருள்மிகு பட்டீஸ்வர சுவாமி திருக்கோயில்	–	1

வ. எண்	இடம்	திருக்கோயில் விவரம்	கருணை இல்லங்களின் எண்ணிக்கை	
			சிறுவர்	சிறுமியர்
25.	ஆனைமலை, கோயம்புத்தூர் மாவட்டம்	அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில்	–	1
26.	காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்	அருள்மிகு கொப்புடைய நாயகி அம்மன் திருக்கோயில்	1	–
27.	சிவன்மலை, ஈரோடு மாவட்டம்	அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்	1	–
28.	மடப்புரம், சிவகங்கை மாவட்டம்	அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்ரகாளியம்மன் திருக்கோயில்	1	–
29.	திருநெல்வேலி மாவட்டம்	அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயில்,	–	1
30.	சென்னை மாவட்டம்	அருள்மிகு முத்துக்குமார சுவாமி தேவஸ்தானம்	1	–
31.	தாயமங்கலம், சிவகங்கை மாவட்டம்	அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில்	1	–
		மொத்தம்	24	10

முதியோர் இல்லங்கள்

1. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம்

2. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம்

பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் அடிப்படை வசதிகள்

83. இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் அடிப்படை வசதிகள் செய்வதற்கு ஏதுவாக நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதிமாற்றம் மூலம் தலா ரூ.5 கோடி மைய நிதி உருவாக்கப்பட்டது. இந்த மைய நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையில் ஆண்டுதோறும் திருக்கோயில்களால் நடத்தப்படும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிலும் மாணவ, மாணவியர்களுக்குத் தேவையான கட்டட வசதி, ஆய்வுக்கூட வசதி, நூலக வசதி, கணினி வசதி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதிகள் செய்திட நிதி உதவி வழங்கப்படுகிறது.

தமிழில் வழிபாடு

84. திருக்கோயில்களில், தமிழில் வழிபாடு செய்வதை நெறிபடுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் "போற்றி" (அருச்சனை) நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அருளாளர்கள் விழா

I. சேக்கிழார் விழா

85. தெய்வச் சேக்கிழார் பிறந்த இடமான சென்னை குன்றத்தூரில் அறநிலையத்துறையின் சார்பில் சேக்கிழார் விழா ஆண்டுதோறும் அரசு விழாவாக நடத்தப்படுகிறது. ஆண்டுதோறும் இவ்விழா நடைபெற ஏதுவாக திருக்கோயில் உபரி நிதியிலிருந்து ரூபாய் ஐந்து இலட்சம் வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு, அதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகையைக் கொண்டு, குன்றத்தூரில் சேக்கிழார் திருநட்சத்திரத்தன்று சிறப்புற விழா நடத்தப்படுகிறது. சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலிலும், ஆண்டுதோறும் ஆகஸ்டு திங்களில் பன்னிரு திருமுறை விழாவும், சேக்கிழார் விழாவும் 12 நாட்கள் கொண்டாடப்படுகின்றன.

II. திருஞானசம்பந்தர் இசை விழா

86. சமயக் குரவர்களில் திருஞானசம்பந்தரைப் போற்றும் வகையில், திருஞான சம்பந்தர் இசை விழா, இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில், ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது. இவ்விழாவிற்கான செலவுத் தொகை ஆணையர் பொது நல நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

III. ஔவையார் விழா

87. நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், துளசியாப்பட்டினம் கிராமத்தில், அருள்மிகு விசுவநாதசுவாமி திருக்கோயில் வளாகத்தில், தமிழ் மூதாட்டி ஔவையாருக்கு திருக்கோயில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும், பங்குனி மாதம், "சதய" நட்சத்திரத்தன்று ஔவையார் விழா நடத்தப்படுகிறது.

IV. தாயுமானவர் விழா

88. பக்தி நெறியில் தத்துவங்களுக்கு முதலிடம் தந்து பாடிய தாயுமான அடிகள், திருச்சி மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயிலில் உள்ள தட்சிணா மூர்த்தியை வணங்கித் திரும்பும்போது, திருமூலர் மரபில் வந்த மௌன குருவைக் கண்டு அவரால் ஈர்க்கப்பெற்றார். நல்ல தமிழ் ஞானப் பாடல்களைத் தமிழ் உலகிற்கு அளித்த தாயுமான அடிகளுக்கு, திருச்சிராப்பள்ளி, மலைக்கோட்டை, அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் விழா நடத்தப்படுகிறது.

V. திருவள்ளுவர் விழா

89. உலகம் போற்றும் தெய்வப்புலவர் திருவள்ளுவர் பிறந்த நாளாகக் கருதப்பெறும் தைத்திங்கள் இரண்டாம் நாளன்று சென்னை,

மயிலாப்பூரில் அமைந்துள்ள அருள்மிகு திருவள்ளுவர் திருக்கோயிலில் "திருவள்ளுவர் திருநாள்" ஆண்டுதோறும், கொண்டாடப்படுகிறது.

VI. அருளாளர் அருணகிரிநாதர் விழா

90. திருவண்ணாமலை மாவட்டம், அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் ஆவணி மாதம், "கேட்டை" நட்சத்திரத்தன்று அருளாளர் அருணகிரிநாதருக்கு, முத்திப்பேறுவிழா திருக்கோயில் சார்பில் ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தப்படுகிறது.

VII. கோட்செங்கட்சோழ நாயனார் விழா

91. திருச்சி மாவட்டம் திருவானைக்காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோயிலில் 63 நாயன்மார்களில் ஒருவரான அருள்திரு கோட்செங்கட்சோழ நாயனார் அவதரித்த திருநாளான மாசி மாதத்தில், "சதய" நட்சத்திரத்தன்று கோட்செங்கட்சோழ நாயனார் விழா ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.

VIII. ஆழ்வார்கள் விழா

92. திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் ஆழ்வார்கள் பன்னிருவருக்கும், பொய்கையாழ்வார் அவதரித்த ஐப்பசி மாதம் "திருவோணம்" நட்சத்திரத்தன்று ஆண்டுதோறும் "ஆழ்வார்கள் விழா" நடத்தப்படுகிறது.

IX. ஆழ்வார்களுக்கும் நாயன்மார்களுக்கும் விழா எடுத்தல்

93. தெய்வத் தமிழில் தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளையும் பிரபந்தங்களையும் பாடிப் பரவிய நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் போற்றும் வகையில் அனைத்து ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலான அருளாளர்களுக்கும் அவர்கள்

அவதரித்த அல்லது முக்தி அடைந்த நாளில் உரிய இடத்தில் ஆண்டுதோறும் விழாக்கள் நடத்தப்பெறுகின்றன.

தலவரலாறும் தலபுராணமும்

94. திருக்கோயில்களின் தொன்மை, வரலாறு, சிறப்புகள், கட்டடக் கலை, கல்வெட்டுச் செய்திகள், புராணச் சிறப்புகள், வழிபாட்டுச் சிறப்புகள் ஆகியவற்றை மக்கள் அறியும் வண்ணம், திருக்கோயில்களில் தலவரலாறு மற்றும் தலபுராணங்கள் வெளியிடப்படுகின்றன. வரலாறு மற்றும் தொன்மைச் சிறப்புகள் இல்லாத திருக்கோயில்களுக்கு அதன் வழிபாட்டுச் சிறப்புகளை அறிந்து கொள்ள ஏதுவாக தகவலட்டைகள் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. இதில் ஏற்பட்டுள்ள தொய்வுகளைக் களைந்து இவ்வரசு பொறுப்பேற்ற பின் தலவரலாறு, தலபுராணம், தகவலட்டைகள் ஆகியவற்றை மறு பதிப்பு செய்யவும் புதிதாக வெளியிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பயணியர் கையேடு

95. பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள திருக்கோயில்கள் பற்றி அறிந்து கொள்ள ஏதுவாக, முக்கியமான நகரங்களில் உள்ள திருக்கோயில்கள் மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள திருக்கோயில்கள், தொடர்பான விவரங்களைச் சேகரித்து, காஞ்சிபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர், மதுரை, திண்டுக்கல், தேனி, கோவை–நீலகிரி, சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய முக்கிய நகரங்களில் பயணியர் கையேடு வெளியிடப்பட்டது. இடைக்காலத்தில் இந்த நடவடிக்கைகள் கைவிடப்பட்டது. இது பக்தர்களுக்கும் சுற்றுலா பயணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வழிகாட்டி என்பதைக் கருத்தில்

கொண்டு இவ்வரசு பொறுப்பேற்ற பின் இவைகளை மறுபதிப்பு செய்யவும் புதிய கையேடுகள் வெளியிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆகமங்களையும் இதர நூல்களையும் தமிழில் வெளியிடுதல்

96. வட மொழியில் உள்ள ஆகம சாத்திர நூல்களையும், சிற்ப சாத்திர நூல்களையும் எளிதில் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் தமிழில் மொழியாக்கம் செய்து வெளியிடப்பட்டு வருகின்றன. அதன் முதற்கட்டமாக உத்ரகாமிக ஆகம நூல், ஆலய நிர்மாண பிம்பலட்சண சிற்பநூல், குமார தந்திரம் ஆகிய நூல்கள் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. மேலும் "இந்து மத இணைப்பு விளக்கம்", "சைவமும் வைணவமும்" போன்ற தமிழ் நூல்கள் மறு பதிப்பு செய்து வெளியிடப்பட்டுள்ளன. மேற்கண்ட நூல்களை தேவைக்கேற்ப மறுபதிப்பு செய்யவும், புதிய நூல்களை வெளிக்கொணரவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பட்டயப் பொறியாளர்

97. திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீடுகள் தயாரித்தளிப்பதில் தாமதம் ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, பொதுப்பணித்துறையிலும் நெடுஞ்சாலைத் துறையிலும் பணியாற்றி ஓய்வு பெற்ற பொறியாளர்கள் தெரிவு செய்யப்பட்ட பெயர் பட்டியல் பொறியாளர்களாக அங்கீகரிக்கப்பட்டு திருக்கோயில்களை சீரமைப்பதற்குரிய கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான வரைபடங்கள், மதிப்பீடுகள் தயார் செய்யும் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

ஸ்தபதிகள்

98. திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகள் அனைத்தும் சிற்ப சாத்திரங்களிலும் ஆகம விதிகளிலும் வரையறுக்கப்

பட்டுள்ளபடி நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், தம் முன்னோர் மூலம் வழிவழியாக இக்கலையை நன்கு கற்றறிந்த வல்லுநர்களையும் சிற்ப சாத்திரக்கலையில் பட்டம் அல்லது பட்டயம் பெற்றுள்ளவர்களின் தகுதியையும் திறமையையும் அடிப்படையாகக் கொண்டு ஸ்தபதிகளாக அங்கீகாரம் செய்யப்படுகின்றனர்.

சிறப்பு வழிபாடும் பொது விருந்தும்

99. நிதி வசதியுடைய திருக்கோயில்களில், **“சுதந்திரத் திருநாள்”** “பேரறிஞர் அண்ணா நினைவு நாள்” ஆகிய நாட்களில் அனைத்துச் சமுதாய மக்களும் பங்குபெறும் வகையில், சிறப்பு வழிபாடும் பொது விருந்தும் ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.

புத்தொளிப் பயிற்சித் திட்டம்

100. திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்களுக்கு தங்கள் பணிகளைத் திறம்பட செய்ய ஏதுவாக **1991**ஆம் ஆண்டு புத்தொளிப் பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. முக்கியமான திருக்கோயில்களைத் தெரிவு செய்து **2002**ஆம் ஆண்டு முதல் புத்தொளிப் பயிற்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டதால் **488** நபர்கள் பயனடைந்தனர். இத்திட்டம் கடந்த ஆண்டுகளில் முற்றிலுமாகக் கைவிடப்பட்டது. இத்திட்டத்தின் முக்கியத்துவம் உணர்ந்து அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் பயன்பெறும் வகையில் மீண்டும் புத்தொளிப் பயிற்சித் திட்டத்தை தொடங்கி நடத்திட இவ்வரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

திருக்கோயில்களில் நாதசுர இசைவாணர் நியமனம்

101. ஆழ்வார்கள் நாயன்மார்களால் பாடப்பெற்றவையும் மங்களாசாசனம் செய்யப்பெற்றவையுமான புகழ்வாய்ந்த தொன்மையான திருக்கோயில்களில் நிதிவசதியின்மையால் திருவிழாக்களின்போது மங்கல இசை இசைக்கப்படுவது குறைந்து

வருவதைக் கருத்தில் கொண்டு, நாதசுரம், தவில், தாள இசைவாணர்களை நியமனம் செய்து அவர்களுக்கு முறையே ரூ.1,500/–, ரூ.1,000/– மற்றும் ரூ.750/– வீதம் மாத ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை மூலம் அவர்களுக்கு மாத ஊதியம் வழங்கப்படுகிறது. இத்திட்ட செயற்பாடு இடைக்காலத்தில் முடங்கியதால் இத்திட்டத்தைச் சிறப்பாக செயற்படுத்த மீண்டும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

திருக்கோயில் பணியாளர்கள் நலத்திட்டங்கள்

102. இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களின் பணியாளர்கள் பல்வேறு பதவி நிலைகளில் பணிபுரிகின்றனர். பணியாளர்களுக்கு அமைந்த நலத்திட்டங்கள் வருமாறு

1. பணியாளர்கள் சேமநல நிதித்திட்டம்
2. துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம்
3. குடும்ப நல நிதித் திட்டம்
4. சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்
5. திருக்கோயில் பணியாளர்கள் நல நிதித் திட்டம்
6. அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர், திவ்விய பிரபந்தம் பாடுவோர், இசைக்கலைஞர், ஆகியோருக்கு ஓய்வூதியத் திட்டம்
7. திருமணம், பண்டிகைகள் மற்றும் வாகனம் வாங்குவதற்கு முன்பணம்
8. கருணை அடிப்படையில் வாரிசுதாரர்களுக்கு வேலை அளித்தல்

9. குடமுழுக்கு ஊக்கத் தொகை
10. ஆண்டுத் திருவிழாக் காலங்களில் கூடுதல் நேரப் பணி ஊக்கத் தொகை
11. பொங்கல் கருணைத் தொகை
12. உயர் கல்வி பயிலும் திருக்கோயில் பணியாளரின் மகன்/ மகளுக்கு நிதியுதவி
13. திருக்கோயில் பணியாளர்களுக்கு சீருடைகளும் அடையாள அட்டைகளும் வழங்குதல்
14. திருக்கோயில் பணியாளர்களுக்கு கணினி பயிற்சி அளித்தல்
15. ஒரு கால பூஜை நடைபெற்று வரும் திருக்கோயில் பூசாரி/ அர்ச்சகர்களுக்கு இலவச மிதிவண்டி வழங்குதல்

i. குடும்ப நல நிதி

103. பணியிலிருக்கும்போது மரணமடையும் திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்காக குடும்ப நல நிதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. உபரி நிதியிலிருந்து இதற்கென ரூ.15 கோடியில் மைய நிதி உருவாக்கப்பட்டு, அதிலிருந்து கிடைக்கப் பெறும் வட்டித் தொகையிலிருந்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி, மரணமடையும் பணியாளரின் வாரிசுதாரருக்கு ரூபாய் 1,00,000/– உதவித்தொகை வழங்கப்படுகிறது.

ii. சிறப்பு சேம நல நிதித் திட்டம்

104. ரூபாய் ஒரு இலட்சமும் அதற்கு மேலும் ஆண்டு வருமானம் பெறும் திருக்கோயில்களின் பணியாளர்களின் நலனுக்காக இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கென திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.50 இலட்சத்தைக்

கொண்டு மைய நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு திருக்கோயில் பணியாளரும் ஓய்வுபெறும்போது அவரது பணிநாளில் செலுத்திய மொத்த சந்தாத் தொகையுடன் இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் பணிக்கொடை ரூ.5,000/–மும் சேர்த்து வழங்கப்படுகிறது.

iii. திருக்கோயில் ஊழியர் நல நிதி

105. ஆண்டு வருவாய் ரூ. 1,00,000/– க்கும் குறைவாக உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களில் ரூ. 750/–க்கும் குறைவாக மாதச் சம்பளம் பெறுகின்றவர்களின் சம்பள நிலுவைத் தொகையை வழங்குவதற்காக, திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 5 கோடி மைய நிதியுடன் இத்திட்டம் செயல்படுகிறது. இந்த வைப்பு நிதி முதலீட்டிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ஆண்டுதோறும் மேற்சொன்ன பணியாளர்களின் சம்பள நிலுவைத் தொகை வழங்கப்படுகிறது.

iv. கருணை அடிப்படையில் வாரிசுதாரர்களுக்கு வேலை வாய்ப்பு

106. திருக்கோயில்களில் பணியாற்றும்போது மரணமடைந்த, திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

v. ஓய்வூதியத் திட்டம்

அ. அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர்கள், திவ்விய பிரபந்தம் பாடுவோர், இசைக் கலைஞர்கள் ஆகியோருக்கு ஓய்வூதியம்

107. திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது நிறைவடைந்து ஓய்வுபெற்ற அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர்கள், அரையர்கள், திவ்விய பிரபந்தம் பாடுவோர்,

இசைக்கலைஞர்கள் ஆகியோருக்கு அரசு நிதியிலிருந்து இத்துறை மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.750/- ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

108. இவ்வரசு பொறுப்பேற்ற பின் **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ரூ. 750/- மாத ஓய்வூதியத்தை ரூ. 1,000/- ஆக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள்.

109. இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகள் விவரம் வருமாறு:

வ.எண்	ஓய்வூதியம் பெறும் கலைஞர்கள்	அரசால் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை
1.	ஓதுவார்	125	39
2.	வேதம்/பிரபந்தம்/அரையர்	59	11
3.	இசைக் கலைஞர்கள்	125	68
4.	அர்ச்சகர் (சைவம் மற்றும் வைணவம்)	691	365
	மொத்தம்	**1000**	**483**

ஆ. கிராமப்புற பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்

110. இத்துறையின் நேரடி ஆளுகையின் கீழ் வராத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயதினை நிறைவு செய்து ஓய்வு பெற்ற பூசாரிகள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.750/- வீதம் 4,000 கிராமப் பூசாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்க அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2353 கிராமக் கோயில் பூசாரிகள் பயன் அடைந்து வருகின்றனர்.

இ. திருக்கோயிலில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் ஓய்வூதியம்

111. திருக்கோயில் பணியாளர்களுக்கென இருவகை ஓய்வூதியத் திட்டங்கள் 2006ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் முதல் செயல்படுத்தப்பட்டது.

i. பணியாளர்கள் சேமநலநிதித் திட்டம்

112. திருக்கோயில்களில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் இந்தத் திட்டம் பொருந்தும். திருக்கோயில் பணியாளர்களில், ஓய்வு பெற 10 ஆண்டிற்கு மேல் பணிக்காலம் உள்ளவர்களுக்கு, பணியாளர் சேமநல நிதி திட்டத்தின் (Employees Provident Fund) மூலம் ஓய்வூதியமும், குடும்ப ஓய்வூதியமும், பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ii. துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம்

113. நிதிவசதி குறைவாகவும், பணியாளர்களின் எண்ணிக்கை குறைவாகவும் உள்ள திருக்கோயில் பணியாளர்களுக்கும், பணியாளர் சேமநல நிதித் திட்டம் கொண்டு வரப்பட்ட நாளில் (1.3.2006) ஓய்வு பெற 10 ஆண்டிற்கு மேல் பணிக்காலம் இல்லாதவர்களுக்கும் பணியாளர் சேம நல நிதித்திட்டத்தில் ஓய்வூதியம் பெறத்தகுதியில்லை என்பதால் துறை நிலையிலான ஓய்வூதியம் பெறும் திட்டம் 2006ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இந்தத் துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின் (Departmental Pension Scheme) கீழ் ஓய்வூதியம் அளிப்பதற்கு ஏதுவாக, நிதிவசதிமிக்க திருக்கோயில்களிலிருந்து ரூ.50 கோடி உபரிநிதியினைப் பெற்று மைய நிதி ஒன்று உருவாக்கப்பட்டது. அதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகையிலிருந்து பணியாளர் சேம நலநிதித்திட்டம் மூலம் ஓய்வூதியம் பெற இயலாத ஓய்வு பெற்ற திருக்கோயில்

பணியாளர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ. 800/– வீதம் ஒய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

iii. திருக்கோயில் பணியாளரின் மக்கட் செல்வங்களுக்குப் படிப்புதவித் திட்டம்

114. அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் தொழில் சார்ந்த பட்டப்படிப்பு (Professional Courses) பயிலும் திருக்கோயில் பணியாளர்களின் மகன் அல்லது மகளுக்கு முதல் ஆண்டு கல்விக் கட்டணத்தில் 25 சதவிகிதத் தொகை நிதியுதவியாக வழங்கப்படுகிறது.

கோசாலைகள்

115. திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெறும் கால்நடைகளைப் பராமரிக்க ஒருங்கிணைந்த கோசாலைகள் பழனி, திருச்செந்தூர், திருச்சி, இராமேசுவரம் ஆகிய நான்கு இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

116. திருக்கோயிலுக்கு உபயமாக வரப்பெறும் உபரிக் கால்நடைகள் மகளிர் சுயஉதவி குழுக்களுக்கும், திருக் கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களில் அர்ச்சகர்களுக்கும் பூசாரிகளுக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது.

“திருக்கோயில்”– திங்களிதழ்

117. 1958ஆம் ஆண்டு முதல் இந்து சமய அறநிலையத்துறை “திருக்கோயில்” என்ற பெயரில் திங்களிதழ் வெளியிட்டு வருகிறது. இவ்விதழ் 2004ஆம் ஆண்டு முதல் புதுப்பொலிவுடன் பல வண்ணங்களில் அச்சிடப்பட்டு, ஆர்வலர்களின் எதிர்பார்ப்பினை நிறைவு செய்யும் வகையில் பல நல்ல கருத்துகளுடனும் புகழ்வாய்ந்த எழுத்தாளர்களின் கட்டுரைகளுடனும் வெளியிடப்பட்டது. கடந்த

ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள தொய்வை நீக்கி இவ்விதழ் மீண்டும் புதுப்பொலிவுடன் வெளியிடப்படுகின்றது.

நிறைவுரை

118. நமது பண்பாட்டு நலத்தையும் நாகரிகத்தையும் பேணிப் பறைசாற்றும் தொன்மையும், வரலாற்று முதன்மையும் வாய்ந்த திருக்கோயில்கள், மாந்தர் இனத்திற்கு மன அமைதியையும், நிறைவையும் தருகின்றன. இத்திருக்கோயில்கள், ஆன்மிக சிந்தனைகளையும், அற உணர்வுகளையும் சமுதாயத்திற்கு வழங்குவதுடன் ஒழுக்க நெறியையும் கற்றுத் தருகின்றன.

119. அன்று தமிழகத்தை ஆண்ட அரசர்கள் பலர் திருக்கோயில்களில் நாள்தோறும் வழிபாடு செய்தல், திருவிழாக்கள் நடத்துதல், திருவிளக்கு ஏற்றல், அன்னம் பாலித்தல் முதலிய அறச்செயல்கள் பல நிகழப் பேருதவி செய்தனர். இன்று, அன்பும் கருணையும் கொண்டுள்ள **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்,**

- திருக்கோயிலை நாடிவரும் இறையன்பர்களின் இறையுணர்வை நிறைவு செய்வதுடன், அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட சீர்மிகு அன்னதானத் திட்டத்தின் மூலம் மதிய வேளையில் உணவளித்து பக்தர்களின் அவாவினை நிறைவேற்றியும்,

- முதியவர்களும் மாற்றுத் திறனாளிகளும், பெரிய அளவிலுள்ள வளாகங்களைக் கொண்டுள்ள திருக்கோயில்களில் வலம் வந்து வழிபட ஏதுவாக மின்கல மகிழுந்தினைத் திருக்கோயில்களுக்கு அறிமுகம் செய்து வைத்தும், தானே ஒரு மின்கல மகிழுந்தினை வாங்கி ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு நன்கொடையாக அளித்தும்,

- திருவிளக்கில்லாத் திருக்கோயிலே இல்லாத நிலையை உருவாக்கிட ஒருகால பூஜைத் திட்ட வைப்பு நிதியை உயர்வு செய்து இத்திட்டத்திற்கு விளக்கேற்றியும்,

- மனிதர்கள் மட்டுமல்லாமல் ஏனைய உயிரினங்களும் நம்முடைய அன்புக்குரியவைதான் என்ற உயரிய கருத்தினை அடிப்படையாகக் கொண்டு விலங்குகளிடத்திலும் அன்பும், கருணையும் கொண்டுள்ள **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** திருக்கோயில்களில் பராமரிக்கப்பட்டு வரும் யானைகளுக்கு ஓய்வும், புத்துணர்வும் அளித்திடும் வகையில் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமை மீண்டும் நடத்தவும்,

- சமூகத்தில் நலிவுற்ற ஏழை எளிய மக்களுக்குப் பயன்தரும் திருமணத் திட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்துவதற்கு ஏதுவாக, அதற்கான செலவுத் தொகையை உயர்த்தி வழங்கிடவும்,

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் உள்ள சிறிய திருக்கோயில்களின் திருப்பணி செய்திட வழங்கும் நிதி உதவியை உயர்த்தி வழங்கியும்,

- திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது நிறைவடைந்து ஓய்வுபெற்ற அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர்கள், அரையர்கள், திவ்விய பிரபந்தம் பாடுவோர், இசைக்கலைஞர்கள் ஆகியோருக்கு அரசு மானியம் மூலம் வழங்கப்படும் ஓய்வூதியமான ரூ. 750/–ஐ ரூ. 1,000/–ஆக உயர்த்தி வழங்கியும்,

120. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** இதுபோன்ற சீர்மிகு திட்டங்களுக்குப் புத்துயிர்

அளித்து இந்து சமய அறநிலையத் துறை பணியாளர்கள் மற்றும் பக்தர்களின் நலனில் தனி அக்கறை கொண்டுள்ளார்கள்.

121 . *“எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு*
உற்றோமே யாவோம்; உனக்கேநாம் ஆட்செய்வோம்”

– ஆண்டாள் திருப்பாவை

என்ற திருப்பாவைக்கேற்ப, இத்துறையிலுள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தமிழகத் திருக்கோயில்களின் மேன்மைக்கும் பெருமைக்கும் வளர்ச்சிக்கும் என்றென்றும் உழைப்பதுடன், **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** நோக்கங்களை நிறைவேற்ற உறுதுணையாகவுமிருந்து ஆர்வத்தோடு பணியாற்றுவதற்காகத் தங்களை ஆட்படுத்திக் கொண்டுள்ளனர்.

எஸ்.பி. சண்முகநாதன்
இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்

இணைப்பு

பகுதி II திட்டங்கள் 2011–12

வ. எண்.	திட்டத்தின் பெயர்	மொத்த செலவு (ரூ. இலட்சத்தில்)	2011–12ஆம் ஆண்டில் ஏற்படக் கூடிய செலவு (ரூ. இலட்சத்தில்)
1	இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அலுவலகங்களுக்குக் கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகள் வாங்குதல்	15.60	15.60
2	பழைய ஈப்புக்கு பதிலாக புதிய ஈப்பு வாங்குதல் (சென்னை–34 இந்து சமய அறநிலையத்துறை முதன்மைத் தணிக்கைத் அலுவலரின் பயன்பாட்டுக்காக)	05.50	05.50
3	புதியதாக மூன்று ஒளிநகல் இயந்திரம் வாங்குதல் (சென்னை–34, இந்து சமய அறநிலையத் துறை ஆணையர், இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அலுவலகங்களுக்கு)	01.50	01.50
4	தொலை நகலி (நிகரி) இயந்திரம் வாங்குதல் (சென்னை – 34, இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்திற்கு)	00.10	0.10
	கூடுதல்	**22.70**	**22.70**